விலை ரூபா: 15.00

படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 04 செவ்வாய்க்கிழமை (18.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி மேயர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவானின் வாசஸ்தலத்திற்கு அருகில் ஆயுதங்களுடன் நடமாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் றீகன் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சந்தேக நபர்களான சாள்ஸ் மற்றும் றீகன் ஆகியோரைப் பிணையில் விடுவிப்பதற்கான மனு நேற்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

அதனைப் பரிசீலித்த நீதவான் ஆனந்தராஜா, இரண்டு பேரையும் தலா 50 ஆயிரம் ரூபாய் ஆட் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் இருவரையும் எவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீதிமன்றில் ஒப்பமிடவேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

எனினும் மாணவன் கபில்நாத் கொலை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சாள்ஸ் மீது சுமத்தப்பட்டு அவர் (18 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் காலப் படிப்பினைகள் குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் தெரிவு

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான மோதல் காலப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகள் குறித்து ஆராய்வதற்கான போர்க் காலப் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

8 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்குள் தமது பரிந்துரைகளை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக சித்தரஞ்சன் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் டாக்டர் அம்ரிதா றொகான் பெரேரா, பேராசிரியர் மெஹமட் தாஹீர் மெஹமட் ஜிஃப்ரி, பேராசிரியர் கருணாரட்ண ஹங்கவத்த, சந்திரபால் (18 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம்

## சர்வதேச நெருக்கடிகள் குழு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆண்டு நடந்து முடிந்த போரின் போது நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைப் பற்றி இலங்கை அரசு உண்மையான ஒரு விசாரணையை நடத்தத் தயாராக இல்லாததால், அது குறித்து ஒரு சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என்று சர்வதேச நெருக்கடிகள் குறித்த குழு கோரியிருக்கின்றது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பேரவல நினைவு நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிப்பு

### பல இடங்களில் படையினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இடம்பெற்ற பேரவலத்தின் ஓராண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அதேபோன்று நல்லை ஆதீனத்தில் நேற்று சர்வமதப் பிரார்த்தனை இடம்பெற்றது. இதில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகள், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உட்பட சர்வமதத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (18 ஆம் பக்கம் பார்க்க)

## மதில் விழுந்து சிறுவன் பலி

(வட்டுக்கோட்டை)

மதில் சரிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவர் அதனுள் நசியுண்டு பலியாகினார். இச் சம்பவம் நேற்று மாலை வட்டுக்கோட்டை வடக்கு, கலைநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த வட்டு.இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் குமார் ரதீஸன் (வயது-11) என்பவரே பலியானவராவார்.

தனது பேரனாரின் வீட்டுக்குச் சென்ற பிரஸ்தாப சிறுவன் பழம் பறிப்பதற்காக மதிலின் மீது ஏறியதாகவும் அதன்போது மதில் சரிந்து சிறுவனுக்கு மேலே விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது படுகாயமடைந்த சிறுவன் யாழ்.போதனா (18 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்க்கமான முடிபு அறிவிக்கப்படாவிடின் எம்.பிக்களுக்கு எதிராகப் போராட்டம்

### ★ வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு தெரிவிப்பு ★

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கமான முடிபை அறிவிக்காவிடின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேருக்கும் எதிராக போராட்டம் நடத்துவோம் என வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுக்குழுத் தலைவர் ஆர்.சி.நடராசா தெரிவித்தார்.

வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வதற்கான விசேட கூட்டம் நேற்றுத் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் ஆர்.சி. நடராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, சிறிதரன், சரவணபவன், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றுகையிலேயே தலைவர் ஆர்.சி.நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த 20 (18 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

பிரபல ஆசிரியர் தயாரித்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

மாதிரிப் பரீட்சை III
வினாத்தாள் I

## புனர்வாழ்வளிக்கப்பட்ட 600 புலிகள் இன்று பெற்றோரிடம் கையளிப்பு

### யாழ்.சிவில் அலுவலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் படைப் பிரிவுக்குட்பட்ட தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு வழங்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அனைவரையும் இன்று பெற்றோரிடம் கையளிப்பதாக யாழ்.இராணுவ சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணச் சிவில் நிர்வாக அலுவலக இணைப்பாளர் மேஜர் பண்டார தெரிவித்துள்ளதாவது,

யாழ்.மாவட்டப் படைப் பிரிவுக்குட்பட்ட தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக் (18 ஆம் பக்கம் பார்க்க)




## தேசியக் கொடியை பறக்க விடப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் விடுதலைப்புலிகளுடனான போர் முடிபடைந்து ஒரு ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று சகல வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் பொது இடங்களில் தேசியக் கொடியைப் பறக்க விடுமாறு யாழ். இராணுவ சிவில் தலைமையகம் கேட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை நேற்றிரவு யாழ்.இராணுவ சிவில் தலைமையகம் பத்திரிகைகளுக்கு விடுத்தது. (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலய மக்களை மீளக்குடியமர்த்தல் தொடர்பான மாநாட்டில் தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

# வலி. வடக்கு மீள் குடியமர்வு விடயங்களில் இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்வு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மக்களின் மீள் குடியமர்வு தொடர்பான பொதுவிடயங்களில் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்ந்து முடிபெடுக்கவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வலிகாமம் வடக்குப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பணிமனையில் நேற்று நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது மக்களுக்கான அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு பொன்னான சந்தர்ப்பமாக இந்திய-இலங்கை ஒப்பந்தம் அமைந்திருந்தது.

ஆனால் அப்போதைய தமிழ் அரசியல்வாதிகள் அதனை உதாசீனம் செய்ததன் விளைவாகவே மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளி யேறவும் பாதிப்புக்களை சந்திக்கவேண்டிய அவலநிலையும்தோன்றியது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கேட்டுகொண்டதற்கு அமைவாக வலி. வடக்கு மக்களின் மீள் குடியமர்வு தொடர்பான பொது விடயங்களில் ஒருமித்து செயற்படுவது குறித்து ஆராய்ந்து முடிபெடுக்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்த நிலையில் வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தொகை, மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்கள், உயர்பாதுகாப்புவலயப் பகுதிகள் உள்ளிட்ட விபரங்கள் குறித்த அறிக்கையினை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு தெல்லிப்பழை உதவி அரச அதிபர் முரளிதரனிடம் கேட்டுக்கொண்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவசுப்பிரமணியம் இராசம்மா



அளவெட்டி மேற்கு, அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் இராசம்மா நேற்று (17.05.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், உருக்குமணி, சிவபாக்கியம், தங்கமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிற்றம்பலம், திருஞானசம்பந்தர் ஆகியோரின் மாமியாரும், சுபாகரன், ஜெனாகரன், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
தொ.பே: 077 5441299

தகவல்:
குடும்பத்தினர்.

(1523)

# கொடுப்பனவுகளை வழங்கக் கோரி

# யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 4 மாதங்களுக்கு மேலாக வழங்கப்படாத கொடுப்பனவுகளை வழங்கக்கோரி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்விச் செலவுக்காக தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்த கொடுப்பனவு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து வழங்கப்படவில்லை.

இலங்கையில் உள்ள ஏனைய தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டபோதும் யாழ்ப்பாணம் தாதியர் புயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கே 4 மாத காலமாக எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என தாதிய மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பிரச்சினை தொடர்பாக கல்லூரி நிர்வாகத்துக்கு சில மாதங்களுக்கு முன்னதாக தெரிவிக்கப்பட்டபோதும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனையடுத்து தமக்கு வழங்கப்படாத 4 மாதக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க வேண்டும் எனவும் இனிவரும் காலங்களுக்குரிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்தாமல் அந்தந்தமாதம் முடிபடைந்ததும் உடனுக்குடன் வழங்கப்படவேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்து, விடுதிக்கடமைக்கு செல்லாமல் காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரையும் பகுதிநேர பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கை அடங்கிய மனுவை யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் மாணவ தரப்பால் கையளிக்கப்பட்டது.

இதேவேளை சுகாதார அமைச்சால் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கான நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் சுகாதார அமைச்சுடன் இது தொடர்பாக கலந்துரையாடி இரண்டு நாட்களுக்குள் தீர்வை பெற்றுத்தருவதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளரால் உறுதியளிக்கப்பட்டது. (ச-7)

# கோஷ்டி மோதலில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நேற்றிரவு இரண்டு குழுக்களுக்கிடையே மோதல் இடம்பெற்றுள்ளது. இவ் மோதல் சம்பவத்தில் பலர் காயமடைந்து காரைநகர் வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

இம் மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த ரி.சசிகுமார் (வயது 27) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். (எ)


## விற்பனைக்கு

தரமான *Sharp Multi Media Projector* விற்பனைக்குண்டு.
*(350W) Model (XR10)*
தொடர்புக்கு:
077 9490534
(1524)



## HP 7100S Branded PC



3.0 GHz (LGA) Processer
80 GB SATA HDD
512 DDR Ram
DVD Rom
Keyboard
Optical mouse
Original Windows XP

With 17" CRT Monitor - 25 000/=
With 17" LCD Monitor - 30 000/=

Alfaa netcafe, Navalar road, Jaffna.
0217394470
(1522)


# பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான கலந்துரையாடல்

30.05.2010 அன்று நடைபெறவுள்ள யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான விடயங்கள் பற்றிய கலந்துரையாடல் 18.05.2010 இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ். வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டவர்களும், இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்களும் தவறாது கலந்து கொண்டு தங்களது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

மேலும் எமது சங்கத்தில் பதிவினை மேற்கொண்ட 2004ஆம், 2005ஆம், 2006ஆம் ஆண்டு வெளிவாரி பட்டதாரிகளையும் அவசியம் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கம்.
(1525)


# மனோதத்துவ வைத்தியம்

*(General Psychotheraphy)*

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

## மீண்டும் யாழில்

17.05.2010 முதல் 24.05.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், த்லையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்க ளுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு)(பிறவியில் ஆண்மை யற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

மானிப்பாய் வீதியிலிருந்து 'செல்வ மாளிகை'
(பழைய வலம்புரி காரியாலயம்)
இல.15 ,வெள்ளாந்தெரு ,யாழ்ப்பாணம் .T.P.: 0719315664 , 0777569205
(க-282)

# இன்று ஒரு தகவல்

## மனம் எனும் பூதம்

ஒருநாள் ஒரு மனிதன் யோகி ஒருத்தரைத் தேடிப் போனான்.

" சாமி! நான் உழைத்து உழைத்து ரொம்பக் களைப்படைந்து விட்டேன். இருந்தாலும் இன்னமும் என்னுடைய வேலைகளெல்லாம் முடியவில்லை. பாக்கியிருக்கு. எல்லா வேலையையும் செய்து முடிக்கிற சக்தி எனக்குக் கிடைக்கவேண்டும். அதற்கு நீங்கள் தான் வழிசொல்ல வேண்டும் " என்றான்.

"அந்த சக்தியை நான் உனக்கு கொடுத்து விடுவேன். இருந்தாலும் அது உனக்குப் பெரிய தொந்தரவாக இருக்குமே!" என்றார் யோகி.

இருந்தாலும் பரவாயில்லை சாமி... அப்படி என்ன பெரிய தொந்தரவு வந்துவிடப் போகிறது... நீங்க எனக்கு அந்த சக்தியைக் கொடுங்க" என்று கேட்டுக் கொண்டான் இவன். இவனுடைய தொந்தரவு தாங்க முடியவில்லை.

யோகி பார்த்தார். 'கிட்டே வா' என்றார். வந்தான். இவன் காதோடு காதாக ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார். அவன் அதை பாராயணம் செய்து முடித்ததும் ஒரு பெரிய பூதம் அவன் முன்னால் வந்து நின்றது.

''ஐயா... நான் உங்களுக்காக எல்லா வேலைகளையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் நாள் முழுவதும் இடைவிடாமல் எனக்கு ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி எனக்கு வேலை எதுவும் இல்லாமல் போய்விட்டால் உங்களையே விழுங்கி விடுவேன். அவ்வளவுதான்! '' என்றது.

அவன் பார்த்தான். வேறு வழியில்லை. சரியென்று ஒத்துக் கொண்டான்.

"சரி... வேலை கொடு" என்றது பூதம்.

"எனக்கு ஒரு பெரிய மாளிகை வேண்டும்"என்றான்.

அடுத்தவிநாடி அவன் கண்முன்னால் ஒரு பெரிய மாளிகை உருவானது.

"எனக்கு ஒரு பெரிய தோட்டம் வேண்டும்" என்றான். அதுவும் உருவாகி விட்டது.

'குதிரை வேண்டும்' என்றான். வந்தது. 'யானை வேண்டும்' என்றான் வந்தது.

அவன் கொடுத்த எல்லா வேலைகளையும் அடுத்த விநாடியே செய்து முடித்தது பூதம்.

இனிமேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இவன் பார்த்தான். நிபந்தனைப் பிரகாரம் பூதம் இவனை விழுங்குவதற்கு நெருங்கி வந்தது.

இவன் எடுத்தான் ஓட்டம்.

ஓடிப்போய் அந்த யோகியின் காலில் போய் விழுந்தான்.

'சாமி என்னைக் காப்பாற்றுங்கள்' என்றான்.

யோகி பார்த்தார். அவனுக்கு அதற்கு ஒரு வழியை சொல்லிக் கொடுத்தார். 'சரி' என்று கேட்டுக்கொண்டு அவன் மாளிகைக்குப் போனான்.

பின்னாடியே வாயைத் திறந்து கொண்டு பூதமும் போய்க்கொண்டிருந்தது.

அங்கே ஒரு பெரிய இரும்புத் தூண் வேண்டுமென்று பூதத்திடம் கேட்டான்.

உடனே தூண் வந்தது.

அதை நல்லா மெருகேற்றி வழவழப்பாக ஆக்கச் சொன்னான்.

அதேமாதிரி ஆக்கியது. இப்ப அந்தப் பூதத்திடம் அவன் சொன்னான்.

"இதோபார்... நீ என்ன செய்ய வேண்டுமென்றால்... நான் நிறுத்தச் சொல்லும் வரைக்கும் இந்தத் தூணில் ஏறி இறங்கிக் கொண்டே இரு" என்றான்.

பூதம் அப்படியே செய்ய ஆரம்பித்தது.

அதற்குப்பின் இவன் வேண்டிய போதெல்லாம் அந்தப் பூதத்தைக் கூப்பிட்டு வேலை வாங்கிக் கொள்வான். இது ஒரு கதை.

எதற்கு இந்தக் கதை என்றால்... மனிதனுடைய மனமும் சக்திவாய்ந்த அவனுடைய சிந்தனையும் இந்தப் பூதத்துக்கிணையானது. சரியான வேலை கொடுக்கவில்லை என்றால் அது கெட்ட வழிகளில் செல்ல அவனைத் தூண்டி விட்டுவிடும்.

அதனால் மனம் என்கிற பூதத்துக்கு வேலை இல்லாத போதெல்லாம் ஈஸ்வர தியானம் என்கிற தூணைப் பற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறார் சுவாமி சின்மயானந்தர்.

ஆனால் நாமெல்லாம் ஏதோ ஒரு தூணைப் பற்றிக் கொண்டே இருக்கிறோம்.

ஒரு குடும்பஸ்தர் ரொம்ப பெருமையாக சொன்னார்:

"நான் எப்பவும் சும்மா இருக்கமாட்டேன் சேர். எந்நேரமும் என் மனைவி முன்னாடி நின்று ஏதாவது பேசிக் கொண்டே தான் இருப்பேன்" என்றார்.

"நிறுத்தவே மாட்டீங்களா?" என்றேன்.

"மாட்டேன்!" என்றார்.

"ஏன்?"என்று கேட்டேன்.

" நான் நிறுத்தினால் அவ பேச ஆரம்பிச்சிடுவாளே! அதனால் தான்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் புற்றுநோய் விழிப்புணர்வு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மிகவும் பிந்திய நிலையிலேயே வைத்திய ஆலோசனையை நாடுகின்றனர். இதனால் ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்தக் கூடிய நிலையிழந்து நோயின் தாக்கம் அதிகரித்த நிலையில் வைத்திய ஆலோசனையினை நாடுவது வேதனைக்குரிய விடயம்.

இதனை தவிர்த்துக் கொள்ளவும் புற்றுநோய் பற்றிய அறிவை மக்களுக்கு ஏற்படுத்துவதற்காகவும் யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவினால் தொடர் புற்றுநோய் விழிப்புணர்வு கண்காட்சி ஒவ்வொரு கல்வி வலயம் தோறும் நடத்தப்படுகின்றது. இதன் மூன்றாம் கட்டமாக 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை புற்றுநோய் விழிப்புணர்வு கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

எனவே தென்மராட்சி கல்வி வலய உயர்தர மாணவர்களையும் பொது மக்களையும் இக்கண்காட்சியினை பார்த்து புற்றுநோய் பற்றிய தெளிவினை காத்திரமாக எல்லோருக்கும் எடுத்துச் சென்று ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவினர் வேண்டிக்கொள்கின்றனர். (6)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

2010 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இளவாலை புனித யூதாததேயுபங்கின் பட்டதாரிகளிற்கான பாராட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு புனித யூதாததேயு ஆலய முன்றலில் இளவாலை பங்குத்தந்தை அருட்பணி ஏ.பி.தேவசகாயம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் செல்வி மரியதாசன் டயாணா, செபஸ்தி றொபின்சன், செல்வி. கொண்சாலிஸ் பீற்றர் பிரட்ஸ் சுஜித்திரா, செல்வி. வின்செண்ற் அன்ரனற்சியாமளா ,செல்வி. முடியப்பு யூட்ஸ் பமிலா ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (4)

## வெசாக் கொண்டாட்ட ஒழுங்குகள்

எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு மண்டைதீவு மற்றும் வேலணைப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இலங்கை கடற்படையினர் தமது முகாம்களை அண்மித்த பகுதிகளில் வெசாக் பந்தல்கள் அமைப்பதிலும் வெளிச்சக் கூடுகள் அமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்காக மூங்கில் தடிகளை வெட்டி எடுத்து வருகின்றனர். மேலும்வெசாக்தினத்தை படையினர் முக்கியத்துவம் கொடுத்து கொண்டாடி வருவது அவர்களின் சமய கலாசார பாரம்பரிய நிகழ்வாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6-22)

## இராசி பலன்



18-05-2010
(வைகாசி 4, செவ்வாய்க்கிழமை)
பஞ்சமி முன்னிரவு 11.51 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 11.13 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை
சுன்னாகம் மயிலணி விசுவநாதர் கொடி, நல்லூர் தெற்கு கற்பகப் பிள்ளையார் கொடி, கொக்குவில் சுப்பிரமணியர் கொடி, மிருசுவில் உசன் கந்த சுவாமி கொடி, நெல்லியடி தடங்கள் புளியடி முருக மூர்த்தி கொடி ,வல்வெட்டி வேவில் வீரகத்திப் பிள்ளையார் கொடி ,புங்குடுதீவு கந்தசுவாமி கொடி.

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், வாக்கு மேன்மை, இஷ்ட சித்தி, போசன சுகம். |
| இடபம் | போசன சுகக் குறைவு, காரிய தாமதம், மனச்சஞ்சலம், உஷ்ண வியாதி. |
| மிதுனம் | மாதர் நட்பு, விருந்துபசாரம், தெய்வ சிந்தை, தொழிலில் ஆர்வம். |
| கடகம் | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, பிரயாணம், எதிர்பாராத நன்மை. |
| சிங்கம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், எடுத்த காரியம் கைகூடும். |
| கன்னி | பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கிய நிலை, முயற்சி கைகூடும், நல்ல செய்தி. |
| துலாம் | எதிர்பாராத செலவு, வேலைச் சுமை, தேவையற்ற பயம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | மனக்கவலை, தனவிரயம், ஆரோக்கியக் குறைவு, வேலைச் சுமை. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், களஸ்திர நன்மை, பொருள் சேர்க்கை, பாராட்டு. |
| மகரம் | தொழிலில் ஆர்வம், பகைவர் நேசம், முயற்சி கைகூடும், தேக நலன். |
| கும்பம் | அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம், பணக்குறைவு, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | ரோகபயம், தனவிரயம், பெரியோர் சந்திப்பு, அதிக பிரயாசை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 80 |
| தக்காளி | 100 | 110 | 75 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 50 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 120 | 130 | 120 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 130 | 85 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 80 |
| லீக்ஸ் | 100 | 110 | 90 |
| பீற்றூட் | 60 | 70 | 80 |
| கறிமிளகாய் | 120 | 130 | 90 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 140 | 150 | .120 |
| கத்தரிதம்புள்ள | 70 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 50 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |


அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்கள் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும், அருகில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட வடமாகாண செயலாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் திருவருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறமும்26 ஆம்திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 3 மணிக்கு கொடியிறக்கமும் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி -இராஜவீதி ஸ்ரீ சக்திவேல் முருகன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு திருக் கல்யாணமும், திருவூஞ்சலும் நடைபெற்று மாலை 5 மணிக்கு முருகப்பெருமான் வெளிவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.(4)

## சேக்கிழார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அனுசரணையுடன் யாழ். சைவபரிபாலன சபை நடத்தும் சேக்கிழார் குருபூசைத் தினம் நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சைவபரிபாலன சபையின் உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார். (4)




## நீராவியடி விநாயகர் ஆலய உற்சவத்தில் தமிழகப் பேராசிரியரின் தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு அஷ்டோத்திர (108) சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் காலைத் திருவிழா தினமும் காலை 9 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். மாலைத் திருவிழா 6 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகி விசேட நாதஸ்வர இசையுடன் சுவாமி வெளிவீதி வருதலும் இடம்பெறும்.

இவ் உற்சவத்தை முன்னிட்டு விசேட நிகழ்வாக தினமும் மாலை 5 மணிக்கு தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள கட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம்.வள்ளியம்மை பொறியியற் கல்லூரி பேராசிரியர் செந்தமிழரசு சிவகுமாரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளது.

இதில் ஆரம்ப நிகழ்வாக நாளை புதன்கிழமை மாலை 4.45 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதனின் தலைமையுரையைத் தொடர்ந்து காரைக்காலம்மையார் என்னும் விடயம் பற்றியும் நாளை மறுதினம் வியாழக்கிழமை அப்பூதியடிகள் என்னும் பொருள் பற்றியும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருநீலநக்கநாயனார் என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து 22ஆம் திகதி சனிக்கிழமை திருமூல தேவநாயனார் என்னும் விடயம் பற்றியும் 23 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை கண்ணப்பநாயனார் என்னும் விடயம் பற்றியும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை மங்கையற்கரசியார் என்னும் தலைப்புப் பற்றியும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சண்டேஸ்வரநாயனார் என்னும் விடயம் பற்றியும் 26 ஆம்திகதி புதன்கிழமை ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசும் என்னும் தலைப்பிலும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை ஆளுடைய நம்பி என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து 28 ஆம்திகதி வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனம் தவத்திரு சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் தலைமையுரையை தொடர்ந்து சேரமான் பெருமாள் என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4)

## வேலணை மருத்துவமனையில் குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு

### நிவர்த்தி செய்யுமாறு வைத்திய அதிகாரி வேண்டுகோள்

(வேலணை)

வேலணை பிரதேச மருத்துமனையில் தற்போது குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரியப்படுத்துகின்றனர்.

இம் மருத்துவமனைப் பகுதியில் உள்ள கிணற்று நீர் உவர்த்தன்மையுடையது. சாட்டியில் இருந்து குழாய் மூலம் வரும் குடிநீரே குடிப்பதற்காக தினமும் ஒரு மணி நேரம் விநியோகிக்கப்படுகின்றது.

இக் குழாய் மூலம் பெறப்படும் நீரானது மருத்துவமனையின் தேவைக்கு போதுமானதாக இல்லையென்றும் தற்போதைய கோடை காலத்தில் குடிநீரின் பாவனையானது அதிகரித்துள்ளமையாலும் மருத்துவமனையின் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய மாதிரி குழாய் மூலமான குடிநீரை பிரத்தியேகமாக பெறக்கூடிய வசதியைசெய்து தருமாறு மருத்துமனையின் பொறுப்பதிகாரி செனவரெட்னா வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-22)

## விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சனசமூக நிலைய மைதானத்தில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 27 ஆம் திகதி முன்பள்ளி மாணவர்களுக்கும் 28 ஆம் திகதி சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கும் இடையிலான போட்டியினையும் நடத்தவுள்ளது.

பிற்பகல் 1.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. (6-30)

## ஆங்கில தின எழுத்தாக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட மட்ட ஆங்கிலதின எழுத்தாக்கப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகள் விபரம் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா தெரிவித்துள்ளார். (6-30)

## கூடைப்பந்தாட்ட அரையிறுதி போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்படும் பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியின் அரையிறுதிப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் பிற்பகல் 3மணிக்கு நல்லூர் கரவெட்டி பிரிவிற்கும் பிற்பகல் 4 மணிக்கு சண்டிலிப்பாய் -யாழ்ப்பாணம் பிரிவிற்கு போட்டிகள் நடைபெறவுள்ளன. (2-30)

## திருவுடையாள் பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்த வெளியீடான திருவுடையாள் -03 இற்கான ஆக்க இலக்கியங்கள் கோரப்பட்டுள்ளன. தகைமையுடையோர் கீழ்வரும் விதிமுறைக்கமைய ஆக்கங்கள் எழுதி பிரதேச செயலக கலாசார உத்தியோத்தரிடம் ஆனி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கலாம் என பிர தேச செயலர் அறிவித்துள்ளார்.

- சொந்த ஆக்கமாகவும் அரசியல் கலப்பற்றதாகவும் இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே பிரசுரமானதாக இருத்தல் கூடாது.
- வேறு ஒருவரின் ஆக்கத்தினை பிரதி பண்ணியதாக இருத்தல் கூடாது.
- தகுதி வாய்ந்ததாக மலர்க் குழுவால் கணிக்கப்படும் ஆக்கம் மட்டும் பிரசுரமாகும்.
- A 4 தாளில் 12 Font அளவு பாமினி எழுத்தில் கணனியில் பதிவு செய்து ஒப்படைத்தல் வேண்டும்.
- விமர்சனம் -4 பக்கங்களிற்கு மேற்படாமல்

சிறுகதை -4 பக்கங்களிற்கு மேற்படாமல்
கவிதை - 2 பக்கங்களிற்கு மேற்படாமல்

- பிரதேசம் சார்ந்த கருத்துகளிற்கு முன்னு ரிமை அளிக்கப்படும். (6)

### வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தினால்

## கலாபூஷண விருதுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளிற்கமைவாக மாவட்ட செயலகத்தினால் கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசத்தில் வசிக்கும் சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை சார்ந்த அறுபது வயதினை பூர்த்தி செய்த கலைத்துறையில் சிறப்பான சேவையாற்றிய கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியுடையவர்கள்பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (6)

## தலைவர்களை முன்மாதிரியாக கொள்வோர் அவர்களின் பகடைக்காயாகக் கூடாது;

### புத்திக பத்திரன எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஒருவர் தம் தலைவரை முன்மாதிரியாகக் கொண்டாலும் அவரின் பகடைக்காயாக இருக்கக்கூடாதென பாராளுமன்றப் உறுப்பினர் புத்திக பத்திரன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தென்மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இளம் தலைவர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது,

தலைவர்கள் விபத்தினால் பிறப்ப தில்லையென சேர் பறொன் ஜயதிலக ஒரு முறை கூறியிருந்தார். அதே போல் தலைவர்கள் புறொயிலர் கோழிகள் போல் உருவாக் கப்படுவதில்லை.

அடுத்த தலைவர்களாக வர விரும்பும் ஒவ்வொருவரும் ஒரு தலைவரை முன்மாதிரியாக கொள்ளவேண்டும். அதற்காக அந்தத் தலைவரின் பகடைக் காயாக மாறவேண்டும் என்பதில்லையென்றார். (2-6)

## 36 மில்லியன் ரூபா செலவில் வடபகுதி தபால் அலுவலகங்கள் புனர்நிர்மாணம்

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் உள்ள தபால் அலுவலகங்களை புனர்நிர்மாணம் செய்ய 36 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் சேதமடைந்த அனைத்து தபாலகங்களும் இத் திட்டத்தின் கீழ் விரைவில் மீளக் கட்டியெழுப்புவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார். (2-6)

## 95 வகை மருந்துகளை ஒரு வாரத்திற்குள் இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது தட்டுப்பாடு நிலவும் 95 வகையான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை உடனடியாகக் கொள்வனவு செய்யவென அரசாங்கம் விசேட குழுவொன்றை நேற்று இந்தியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஏற்பாட்டில் இந்தியாவுக்கு பயணமாகும் இக் குழுவில் மருந்துப் பொருள் விநியோகப் பிரிவு பணிப்பாளர், அரசாங்க மருந்துப் பொருள் கூட்டுத்தாபன பிரதி முகாமையாளர், தேசிய மருந்துப் பொருள் அதிகார சபையின் மருந்தாளர், சுகாதார அமைச்சின் பிரதம மருந்தாளர், நிதியமைச்சு பிரதிநிதி ஆகியோர் அடங்கியுள்ளனர்.

பயணமாகும் இக் குழுவினர் இலங்கைக்கு மருந்துப் பொருட்களை விநியோகிக்கும் இந்திய நிறுவனங்களின் பிரதிநிதிகளை மும்பாய் நகரில் சந்திக்கவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

மேற்படி 95 அத்தியாவசிய மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை இக் குழுவினர் இந்திய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு அவற்றை பரிசீலனைக்கு உட்படுத்தி மருந்துப் பொருள் விநியோகிக்கவென தகுதியான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு விமானம் மூலமோ கப்பல் மூலமோ குறித்து மருந்துப்பொருட்களை ஒரு வார காலத்திற்குள் இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளோர்க்கு பதிவு திருமணங்கள் செய்ய ஏற்பாடு

(கொழும்பு)

புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முறையான திருமணப் பதிவை மேற்கொள்ளாத தம்பதியினருக்கு சட்டபூர்வமான முறையில் திருமணத்தை நடத்தி வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கில் யுத்தம் இடம்பெற்று வந்த காலப் பகுதிகளில் கோயில் மற்றும் தேவாலயங்களில் திருமணம் செய்துகொண்ட பல தம்பதியினர் தற்போது புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளனரென ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தம்பதியினர் சேர்ந்து வாழ விரும்பும் பட்சத்தில் அவர்களது பெற்றோர் அல்லது உறவினர்களை அழைத்து முறையே பேச்சு நடத்தி அனைவருக்கும் ஒரே தினத்தில் திருமணம் நடத்த முடிபு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா கலாசார மண்டபத்தில் எதிர் வரும் 12ஆம் திகதி இத்திருமண வைபவத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-6)

## எவரையும் இழிவுபடுத்துவதற்கு ஊடகவியலாளருக்கு உரிமையில்லை

### ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எவரையும் இழிவுபடுத்தவோ அல்லது மற்றையோர் மனங்களைப் புண்படுத்தவோ ஊடகத்துறையினருக்கு எந்த வகையிலும் உரிமையில்லை என்று தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித் தார்.

நாட்டின் நடப்புகள் நிலவரங்களை எழுதும் அதேவேளை அரசாங்கம் எதை செய்தாலும் அதற்கு விரோதமாக எழுதும் போக்கையும் சிலர் கொண்டுள்ளனர்.

எனினும் நான் அனைத்து ஊடகவியலாளருடனும் சுமுகமாக செயலாற்றுவேன் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் உள்ள மல்வத்த மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கல தேரரினது ஆசி பெற்ற போது மேற்கண்டவாறு தெரிவித் தார்.

மேலும் அமைச்சர் பௌத்த,இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மத வழிபாட்டு நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள மத குருக்களிடமும் ஆசி பெற்றார். (2-6)

## 18.05.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- *1565- ஓட்டோமான் படைகள் மால்ட்டாவை அடைந்தன. மால்ட்டாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியது.*
- *1652- வட அமெரிக்காவிலேயே முதன் முதலில் அடிமைத் தொழிலை இல்லாதொழிக்கும் சட்டத்தை ரோட் தீவு கொணர்ந்தது.*
- *1765-கனடாவின் மொன்ட்றியால் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் அழிந்தது.*
- *1803-ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் மீது போரை அறிவித்தது.*
- *1804-முதலாம் நெப்போலியனை பிரெஞ்சு மன்னனாக செனட் தெரிவு செய்தது.*
- *1869- ஏசோ குடியரசு கலைக்கப்பட்டு ஜப்பானுடன் இணைக்கப் பட்டது.*
- *1880- எடிசனின் போனாகிராஃபின் காப்புரிமப் படிமம்*
- *1896- கோடின்கா துயரம்: ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலசின் முடி சூட்டும் நிகழ்வுக் கொண்டாட்டத்தின் போது "கோடின்கா" என்ற இடத்தில் இடம் பெற்ற நெரிசலில் சிக்கி 1389 பேர் இறந்தனர்.*
- *1910- ஹேலியின் வால்வெள்ளியின் வாலினூடாக பூமி சென்றது.*
- *1956- உலகின் 4ஆவது பெரிய மலையான லகோத்ஸே மலையின் உச்சியை முதன் முதலில் சுவிற்ஸர்லாந்து மலையேறிகள் எட்டினர்.*
- *1969- அப்பலோ -10 விண்ணுக்கு ஏவப்பட்டது.*
- *1974- சிரிக்கும் புத்தர் என்ற பெயரிடப்பட்ட திட்டத்தில் இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதித்தது.*
- *1980- வோஷிங்டனில் சென் ஹெலன்ஸ் மலை தீ கக்கியதில் 57 பேர் கொல்லப்பட்டனர். 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டது.*
- *1984- அன்னலிங்கம் பகீரதன் சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது விடுதலைப்புலிப் போராளி என்ற பெருமையைப் பெற்றார்.*
- *1991-ஹெலன் ஷார்மன் விண்வெளிக்குச் சென்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமையைப் பெற்றார்.*
- *1991- வடக்கு சோமாலியா சோமாலிலாந்து என்ற பெயரில் மீதமான சோமாலியாவில் இருந்து விடுதலையை அறிவித்தது. ஆனாலும் அனைத்துலகம் இதனை அங்கீகரிக்கவில்லை.*
- *2006- நேபாளம் மதசார்பற்ற நாடாகவும் அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.*


### பிறப்புக்கள்

- *1048-ஒமர் கையாம், பார்சியக் கவிஞர், கணிதவியலாளர் (இறப்பு-1131)*
- *1908-இயான் பிளெமிங், ஆங்கில எழுத்தாளர் (இறப்பு-1964)*
- *1920-பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் 2 (இறப்பு-2005)*
- *1913- நீலம் சஞ்சீவ் ரெட்டி, இந்தியாவின் 5 ஆவது குடியரசுத் தலைவர் (இறப்பு1996)*
- *1933- தேவகவுடா, இந்தியாவின்11ஆவது பிரதமர்*
- *1939- பீட்டர் குருன்பெர்க், ஜேர்மனிய இயற்பியலாளர்.*

இன்று அனைத்துலக அருங்காட்சியக நாள்



# கலைஞர் கருணாநிதி



**தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி தொடர்பில் துக்ளக் 'சோ' ஆனந்தவிகடனுக்கு வழங்கிய செவ்வி இங்கு தரப்படுகின்றது. (ஆ-ர்)**

**கேள்வி:** "இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள், ஒரு சட்டமன்றத் தேர்தல்... என ஹாட்ரிக் வெற்றி. தொடர்ந்து 11 இடைத் தேர்தல்களிலும் கருணாநிதியே வென்றிருக்கிறார். இவை எதனால் சாத்தியமானது என்று நினைக்கிறீர்கள்?"

**பதில்:** " சிம்பிள்!

கலைஞர் மூன்று சூத்திரங்களை வைத்திருக்கிறார். அதன் மூலம் சுலபமான வெற்றிகளைப் பெற்றுவருகிறார். முதலாவது, பலமான கூட்டணி. இலவசத் திட்டங்களை மக்களின் மனம் குளிர்வது மாதிரி அள்ளி இறைப்பது இரண்டாவது காரணம். பணபலம் மூன்றாவது. இதுவரை அடைந்த அத்தனை வெற்றிகளுக்கும் இந்த மூன்றும் தான் முக்கிய காரணம்!"

**கேள்வி:** இலவசத் திட்டங்களைக் குறை சொன்னாலும் அவை மக்களுக்குப் பயன் அளிக்கும் விடயங்கள் தானே? "

# யாருக்கும் நியாயம் செய்யவில்லை

**பதில்:** " ஒரு ரூபாய்க்கு அரிசி கொடுப்பதால் அடித்தட்டு மக்கள் பயனடைகிறார்கள் என்பதைத் தவிர, மற்ற இலவசத் திட்டங்களால் தமிழ் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. வீட்டுக்கு வீடு இலவச கலர் டி.வி. கொடுப்பதால் என்ன. பயன்?

இதை வேறு மாதிரியாகப் பார்க்கவேண்டும். இலவசத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணம், தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டியது. வளர்ச்சிக்குப் பயன்படுத்தாமல், வேறு பகுதிக்கு வாரி இறைப்பதால் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்பதை யாரும் உணர்ந்த மாதிரி தெரியவில்லை. " திட்டம் போடுவதற்கு முன்னால் பணம் இருக்கிறதா என்று பார்க்கக் கூடாது. திட்டத்தைப் போட்டுவிட வேண்டும். அதன்பிறகு, பணம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்' என்று முதலமைச்சர் கலைஞர் சொல்லியிருக்கிறார்.

பொருளாதாரம் தெரிந்த யாரும் இப்படி ஒரு தத்துவ முத்தை உதிர்க்கமாட்டார்கள். நம்மிடம் இருப்பு என்ன, மேலும் வருமானம் வரக்கூடிய வாய்ப்பு என்ன என்று பார்த்து, அதை வைத்து என்ன மாதிரியான திட்டத்தைத் தீட்டலாம் என்று நினைப்பவர்தான் பொருளாதாரம் உணர்ந்தவராக இருக்கமுடியும். ஆனால், தமிழகத்தில் இதற்கு மாறாக நினைப்பவர் கையில் அரசியல் அதிகாரம் சிக்கி இருக்கிறது!"

**கேள்வி:** "ஆண்டுதோறும் டாஸ்மாக் வருமானம் உயர்ந்து வருவதை ஒரு சாதனையாகச் சொல்கிறார்கள். சாராயம் விற்ற காசில் சமூகத்திட்டங்கள் அமுலாவது, சமூக ஆர்வலர் என்ற முறையில் உங்களுக்குக் கவலை தரவில்லையா? "

**பதில்:**' உங்கள் கேள்வியில் ஒரு தவறு இருக்கிறது. நான் சமூக ஆர்வலர் அல்ல. அப்படிச் சொல்லிக் கொள்பவனும் அல்ல!

என்னைப் பொறுத்தவரை, மதுவிலக்கு என்பது இனி நம் நாட்டில் சாத்தியம் இல்லை. குஜராத்தில் கூட முழுமையாக மதுவை ஒழிக்க முடியவில்லை. மதுவை ஒழிக்கக் குடிய காலகட்டத்தை நாம் தாண்டி வந்து விட்டோம் என்று நினைக்கிறேன். இன்று மேடையில் பேச, ஒரு கட்டுரை எழுத மட்டுமே பயன்படும் விடயம் அது.

ஆனால், 'டாஸ்மாக் நடத்துவது எல்லாம் ஒரு அரசாங்கத்தின் வேலையா? வருமானம் வருகிறது என்றால், பீடாக் கடை கூட இனி மேல் நடத்துவார்களோ என்னவோ? அரசாங்கம் ஒரு கண்காணிப்பு மேற்பார்வையாளராக இருந்து பார்க்கலாமே தவிர, இதுபோன்ற தொழில்களை நேரடியாக நடத்தக்கூடாது. அது அநாவசியம் என்று நினைக்கிறேன்!"

**கேள்வி:** "சட்டப்பேரவைக்குப் புதிய கட்டடம் கட்டியிருக்கிறார் முதல்வர். புதிய நூலகக் கட்டடம் திறப்பதும், உலகத் தமிழ் மாநாடு நடத்துவதும் தான் முன்னால் உள்ள முக்கிய கடமைகள். மற்ற அனைத்தும் முடிந்து விட்டதாகச் சொல்கிறாரே?"

**பதில்:** " தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டிவிட்டேன். எங்கும் எந்த வரம்பு மீறலும் நடக்கில்லை என்று சொல்ல கலைஞர் தயாரா? என் ஆட்சிக் காலத்தில், யாரும் எதற்காகவும் சிறு அளவுக்குப் பணத்தைக் கூட இலஞ்சமாக வாங்கவில்லை. இலஞ்சமும், ஊழலும், முறைகேடும் நடக்காத மாநிலமாக தமிழகத்தை மாற்றிக் காட்டிவிட்டேன் என்று அவரால் சொல்ல முடியுமா ?

காவிரிப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டேன்... முல்லைப் பெரியாறு பிரச்சினையில் நடக்க இருந்த அநீதியைத் தடுத்துவிட்டேன் என்றெல்லாம் அவரால் சொல்ல முடியுமா?

24 மணிநேரமும் என் ஆட்சியில் மின் சாரம் இருக்கிறது... மின்வெட்டேகிடையாது என்றாவது அவரால் சொல்லமுடியுமா? சென்னை உள்ளிட்ட பெரிய நகரங்களில் மூன்று மணிநேரமும், மற்ற இடங்களில் ஆறுமணிநேரம் வரை மின்சாரம் இல்லை. " ஏன் இல்லை?" என்று கேட்டால் ஜெயலலிதா திட்டம் தீட்டவில்லை என்கிறார் கருணாநிதி. ஆள்வது இவரா...அவரா?

நான்கு ஆண்டு காலம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்துவிட்டு, " ஏன் சார் மின்வெட்டு?" என்றால் ஜெயலலிதாவைக் குறை சொல்வது ஏமாற்று அரசியல். ஜெயலலிதா ஆட்சியில் மின் உற்பத்தித்திட்டங்கள் தீட்டப்பட்டு, நமது பயன்பாட்டுக்குப் போக, மீதியை மற்ற மாநிலங்களுக்குத் தரக்கூடிய நிலைமையைத்தான் அவர் வைத்திருந்தார். ஆனால் கலைஞரோ, அடுத்தவர் மீது பழிபோடுவதையே தன் வேலையாக வைத்திருக்கிறார்.மின்வெட்டு ஒன்று போதாதா இந்த ஆட்சியின் அவலட்சணத்தைக் காட்டுவதற்கு?

இன்றைக்கு நரேந்திரமோடியை விமர்சிப்பவர்கள் கூட, " குஜராத் ஒரு முன் மாதிரி மாநிலமாக இருக்கிறது" என்பதை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட மாநிலமாக தமிழ் நாட்டை கலைஞரால் சொல்லமுடியுமா? பிறகு, எதை வைத்துத் தன் கடமைகள் முடிந்ததாக அவர் சொல்ல வருகிறார் என்றே புரியவில்லை.

கட்டடம் கட்டுவதெல்லாம் சாதனையா? சாதாரண மனிதன்தான் குடியிருக்க வீடு கட்ட இலஞ்சம் தந்து, அநியாயமான விலை கொடுத்துப் பொருட்களை வாங்கிச் சிரமப்பட வேண்டும். ஒரு அரசாங்கம் கட்டடம் கட்டுவதில் என்ன சிரமம் இருக்கிறது? பணம் இருக்கிறது. இல்லையென்றால், கூசாம் கடன் வாங்கிக் கட்டலாம். இதையெல்லாம் ஒரு சாதனையாகச் சொல்ல முடியுமா?

அடுத்து. செம்மொழி மாநாடு நடத்துவதையும் சாதனை என்கிறார். ஒரு அரசாங்கம் நினைத்தால், மாநாடு நடத்த முடியாதா? பெரிய பந்தல் போட முடியாதா? ஒரு இலட்சம் பேருக்குச் சோறு போட முடியாதா? உடனே" அழகான பந்தல் அமைத்தேன்.பார்த்தாயா, அதிகாலையில் சூடான இட்லி கொடுத்தேன் சாப்பிட்டாயா? " என்று இதையும் சாதனையாகப் பட்டியல் போடுவார் கலைஞர் !"

**கேள்வி:** "கருணாநிதியின் குறிப்பிடத்தக்க சாதனைகளாக நீங்கள் எதைச் சொல்வீர்கள்?

**பதில்:**"மூத்த மகன் மு.க.அழகிரியை மத்திய மந்திரி ஆக்கியதும் இளைய மகன் ஸ்டாலினைத் துணை முதல்வராக அமர்த்தியதும் மகள் கனிமொழியை எம்.பி. அந்தஸ்தில் உட்கார வைத்ததும் பேரன் தயாநிதி மாறனை மத்திய மந்திரியாகத் தொடர வைத்திருப்பதும் இவர்களைத் தாண்டி இருக்கக் கூடிய அடுத்த வாரிசுகளை சினிமா உலகுக்குள் இறக்கிவிட்டு அதையும் ஆக்கிர மிக்க வைத்திருப்பதும் அவர்களும் அரசியலுக்கு வரலாம் என்று பச்சைக் கொடி காட்டியிருப்பதும் சன் டி.வி. 'க்கும் தனக்குமான தகராறுக்கு முற்றுப்புள்ளி வைத்ததன் மூலமாக தினகரன் அலுவலக எரிப்பு மற்றும் அங்கு நடந்த கொலைச் சம்பவத்தையே நடக்காதது மாதிரி ஆக்கிவிட்டதும் மட்டுமே கலைஞரின் சாதனைகள். தனக்கும் தன்னுடைய குடும்பத்துக்கும் தவிர மற்றவர் யாருக்கும் அவர் நியாயம் செய்யவில்லை!



**கேள்வி:** "விமர்சிப்பவர்கள் கூட கருணாநிதிக்கு சிறந்த நிர்வாகி என்ற பட்டத்தைக் கொடுப்பார்களே?"

**பதில்:** "பட்டங்களா அவருக்குப் பஞ்சம்? இந்தப் பட்டம் பற்றி மட்டும் கவலைப்பட்டால் மற்ற எல்லா பட்டங்களுக்கும் அவர் பொருத்தமானவர் என்பதை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா?"

**கேள்வி:**"கருணாநிதியை நீங்கள் கடுமையாக விமர்சிக்கிறீர்கள். ஆனால் அவருக்கு மாற்றாக இருக்கக் கூடிய ஜெயலலிதா இன்னும் தன்னை மகாராணியாக நினைத்துக் கொண்டு இறங்கி வர மறுக்கிறாரே? மக்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லையே?"

**பதில் :** "எந்தத் தலைவர்தான் மக்களோடு ஐக்கியமாகி இருக்கிறார்.? ராகுல் காந்தி மாதிரி குடிசைக்குள் போய் காபி குடிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? என்றாவது ஒருநாள் அப்படிச் செய்யலாம். தினமும் அப்படிச் செய்ய முடியுமா? இன்று ஜெயலலிதா எப்படி இருப்பதாகச் சொல்கிறீர்களோ அதே மாதிரிதான் முன்னரும் இருந்தார். இரண்டு முறை முதலமைச்சராகவும் ஆனார். மக்கள் பிரச்சினைகள் அனைத்துக்கும் அவரது ரியாக்ஷன்கள் அறிக்கைகளாக வருகின்றன. போராட்டங்களைக் கட்சிக்காரர்கள் நடத்துகிறார்கள். அவரும் தன்னால் முடிந்த இடங்களுக்குச் செல்கிறார். எல்லாத் தலைவர்களும் எப்படி மக்களிடம் ஐக்கியமாகி இருக்கிறார்களோ அப்படியே ஜெயலலிதாவும் இருக்கிறார்.!"

**கேள்வி:**" அ.தி.மு.க.வின் வளர்ச்சிக்கு சசிகலா தடையாக இருக்கிறார். இரண்டாம் கட்டத் தலைவர்கள் யாரும் வளர்ந்து விடாமல் தடுக்கிறார் என்றும் சொல்லப் படுகிறதே?"

**பதில் :**"இரண்டாம் கட்டத் தலைவர்களை எந்தத் தலைவர்தான் வளர்த்து விடுகிறார்? கலைஞர் தனக்கு அடுத்ததாகத் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களை மட்டும் தானே வளர்க்கிறார். என்னைப் பொறுத்த வரையில் யாரையும் தலைவர்களாக வளர்க்க முடியாது திணிக்க மட்டுமே முடியும்!"

**கேள்வி:** "ஓட்டுப் போட பணம் வாங்கும் நிலை எங்கே போய் முடியும்?"

**பதில்:** "தி.மு.க. இந்தச் சமூகத்துக்குச் செய்த மிகப் பெரிய கெடுதலாக இதைத்தான் சொல்வேன். இந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு எனக்கு ஓட்டுப் போடு என்று சொல்லி மக்களை ஊழல் வாதிகளாக ஆக்கிவிட்டார்கள். ஏன் பணம் கொடுக்கலே? என்று மக்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். கொடுக்கிறவனைக் கெடுக்காதே என்றும் சொல்கிறார்கள். மக்கள் கரஃப்ட் ஆனது ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய துரதிர்ஷ்டம்!"


**கேள்வி:** "அடுத்து வரப் போகும் தேர்தலிலும் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி தொடரும் தானே?"

**பதில்:** "பிரச்சனை இருப்பது போலத் தெரியவில்லை. மாநிலத்தை ஆள தி.மு.க. வுக்கு காங்கிரஸ் தேவை. மத்திய ஆட்சிக்கு தி.மு.க.வின் எம்.பி.க்கள் அவசியம். எனவே அவர்களுக்குள் பிரச்சினை வர இப்போது வாய்ப்பு இல்லை!"

**கேள்வி:**"தி.மு.க. வில் நடந்து வரும் ஸ்டாலின்- அழகிரி மோதலை எப்படிப் பார்க்கிறீர்கள்?"

**பதில் :** "இது கலைஞர் செய்த மிகப் பெரிய தவறு. ஒரே குடும்பத்தில் இரண்டு பேரைக் கொண்டுவந்தால் பிரச்சனை வரும் என்று சாமான்யனுக்குக் கூடத் தெரியும். பால் தாக்கரே தன் மகனையும் மருமகனையும் கொண்டு வந்தார். கட்சி உடைந்தது. ரிலையன்ஸ் நிறுவனத்தில் நடந்த உடைசல்தான் அனைத்துக்குமான இலக்கணம்.எங்கு வியாபரமும் அபரிமிதமான பணமும் குவிகிறதோ.. அங்கு குடும்ப மோதல்களைத் தவிர்க்க முடியாது. இன்றைக்கு தி.மு.க.வும் ஒரு வியாபார ஸ்தாபனம் தான்.

(13 ஆம் பக்கம் பார்க்க...)



டாக்டர்
எம்.கே.முருகானந்தன்
M.B.B.S(Cey),D.F.M.(SL),M.C.G.P(SL)
குடும்ப வைத்திய நிபுணர்

# குதியில் வலி

## குதியில் வலி, குதிவாதமா?

### குதிவாதம் என்றால் என்ன?

உங்கள் பாதத்தில் வலி ஏற்படுகிறது. அந்த வலி நீங்கள் காலையில் படுக்கையை விட்டு எழுந்து பாதத்தை நிலத்தில் வைக்கும் போது கடுமையாக இருக்கிறது.தொடர்ந்து நடக்கும் போது வலி குறைந்து விடுகிறது. இத்தகைய வலிக்கு பல காரணங்கள் இருக் கலாம்.ஆனால் முக்கிய காரணம் பிளாண் டர் பியடிஸ் (PLANTER FASCITIIS) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் நோய் தான். எம்மவர்கள் இதனைப் பொதுவாகக் குதிவா தம் என்பார்கள். ஆனால் இது தவறான அர்த்தத்தைக் கொடுக்கும் பெயராகும். வாதம் என்பது மூட்டுக்களில் ஏற்படும் நோய்.

ஆனால் இது மூட்டுக் களில் ஏற்படும் நோய ல்ல.எனவே உண்மை யில் வாதம் அல்ல.



பாதத்தின் அடிப் பகுதியில் உள்ள சவ்வு களின் அழற்சியாலேயே இந்நோய் ஏற்படு கிறது.மூட்டுக்களில் அல்ல.

அத்துடன் பக்கவாதம் என்றும் பாரிச வாதம் என்றும் சொல்லப்படும்.நோய்க்கும் இதற்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இது ஆபத்தான நோயல்ல என் பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங் கள்.சில்லறைத் துன்பங்களைக் கொடுக்கும் நோய் மட்டுமே.இந்நோயின் அறிகுறிகள் என்ன என்பதை முதலில் தெளிந்து கொள் ளுங்கள்.

இந்நோயின் முக்கிய அறிகுறி உங்கள் பாதத்தின் குதிப்பகுதியில் ஏற்படும் வலி தான். சில வேளைகளில் அப்பகுதி சிவக்க லாம், வீங்கலாம் அல்லது சூடாக இருப்பதை யும் நீங்கள் உணரக் கூடும்.இவை அழற்சி யின் அறிகுறிகளாகும்.உங்கள் பாதத்தின் அடிப்பகுதியில் உள்ள தடித்த உள்ளங் காலுக்குரிய சவ்வுப் பகுதியில் ஏற்படும் அழற்சியால் தான் இந்நோய் எற்படுகிறது.

குதிவாதத்தினால் ஏற்படும் வலியானது முன்பே சொல்லியது போல முக்கியமாக அதிகாலையில் நீங்கள் படுக்கையை விட்டு எழுந்து முதல் அடி வைக்கும் போது மிக அதிகமாக இருக்கும்.சில அடிகள் நடக்க வலி தானே குறைந்துவிடும். ஆனால் கவனி யாது விட்டால் நாட் செல்லச் செல்ல வலி நாள் முழுவதும் உங்களுக்குத் துன்பம் தரக் கூடும்.

### குதிவாதம் ஏற்படக் காரணம் என்ன?

குதிவாதம் ஏற்படக் காரணங்கள் பலவா கவோ அன்றி ஒன்றோடு ஒன்று தொடர்பு டைய வெவ்வேறாகவோ இருக்கலாம். உங் கள் குதிப் பகுதியிலும் காலின் கெண்டைப் பகுதியிலும் உள்ள தசைகளின் இறுக்கம் காரணமாக இருக்கலாம். மாறாக பாதப் பகுதியின் தளர்ச்சியும் காரணமாகலாம். அல்லது நீங்கள் செய்யும் உடற்பயிற்சியைத் தவறாகச் செய்வதும் காரணமாகலாம். அல்லது உங்கள் பாதத்தின் இயற்கையான வளைவுப் பகுதிக்கு நீங்கள் கொடுக்கும் அதிகரித்த வேலைப்பளுவாகவும் இருக் கலாம். உதாரணமாக மிக நீண்ட தூரம் ஓடுதல், அதி வேகமாக ஓடுதல், அடிக்கடி ஓடுதல் போன்ற பயிற்சிகளைக் கூறலாம்.

பொருத்தமற்ற அதாவது அளவற்ற கால ணியை நீங்கள் உபயோகிப்பதும் குதி வாதத் திற்கு காரணமாகலாம் அல்லது உங்கள் தொழில் காரணமாகவோ அல்லது பொழுது போக்குப் பழக்கம் காரணமாகவோ ,நீங்கள் குதிகாலுக்குரிய சவ்வுக்கு அதிக வேலை கொடுத்து ஊறுவிளைவிப்பதாலும் இருக்க லாம்.

### எப்படி சிகிச்சையளிக்கப்படுகிறது?

உங்கள் வைத்தியர் உங்களுக்கு ஆலோ சனை , பயிற்சி முறைகள் ,மாத்திரைகள் , ஊசி ஏற்றுதல் போன்ற பல்வேறு வகையான சிகிச்சைகளில் ஒன்றையோ அல்லது சிலவற்றைச் சேர்த்தோ அளிக்கக் கூடும். அவர் உங்களுக்கு அளிக்கும் சிகிச்சை உங்கள் குதிவாதம் ஏற்படுவதற் கான காரணத்தை அகற் றுவதாக இருக்க வேண் டும்.அத்துடன் சிகிச் சையானது உங்கள் பாதத்தில் ஏற்பட்ட அழற்சியைத் தணி க்கவும் வேண்டும்.

முதலாவதாக உங்கள் பாதணி யில் கவனம் செலுத்துங் கள். உங்கள் உள் ளங்காலுக்கு ரிய சவ்வுக்கு ஏற்பட்டு ள்ள அதிக வேலைப் பளு வைக் கொடுக் காத , அதன் வேதனையைக் குறைப்பதற்கு ஏற்ற காலணி களை நீங்கள் தேர்ந்து அணியவேண் டும். நீங்கள் தேர்ந்தெடுக் கும் காலணி உங்கள் உள்ளங் காலின் இயற்கையான வளைவுக்கு இசைந்து ஒத்தாசை வழங்குவதான அமைப்புடைய தாக இருக்கவேண்டும். அத்துடன் உங்கள் பாதணியின் அளவு உங்களுக்கு மிகவும் பொருத்தமுள்ளதாக இருக்கவேண்டும்.




குதிவாத நோய் ஏற்பட்டுள்ள விளையாட்டு வீரர்களும் மற்றும் துடிதுடிப்பான வாழ்க்கை முறை கொண்டவர்களும் தமது பாதங்களு க்கு மேலதிக வேலை கொடுப்பதைக் குறை க்க வேண்டும். அதாவது பாய்தல், ஓடுதல் , துள்ளல் போன்றவற்றைச் செய்யும் நேரத் தைக் குறைக்கவேண்டும். உங்கள் பாத வளைவுக்கு ஏற்ற விசேட பாதணிகளும் சில வேளை தேவைப்படலாம்.

காலையில் படுக்கையை விட்டு எழுந்து நடமாட ஆரம்பிக்க முன்னரே பயிற் சிகளை ஆரம்பி யுங்கள். எழுந்தவுடன் உங்கள் பாத த்தை குறுக்கு வாட்டாக அழுத்தித் தேய்த்து மஸாஜ் செய் தால் எழுந்து நடக்கும் போது வலி குறைவாக இருக்கும்.

அடுத்து தசைகளைப் பலப்படுத்தும் பயிற்சி களை நீங் கள் செய்ய வேண்டும். இவை உங்கள் நோயைத் தணிப்பதில் நல்ல பல னைக் கொடுக்கும். முழங் காலுக்குக் கீழ்இருக்கும் கெண்டைக்கால் தசை களுக்கான இழுவல் பயிற்சிகளும் குதி கால் வலிக்கு உத வும். படங்களில் உள்ளபடி இரண்டு விதமாக செய்யுங்கள்.சுவரை உங்கள் கைகளால் தள்ளுவது போன்றவையே இப் பயிற்சிகள்.



முதலாவது படத்தில் காட்டியபடி உங்கள் இரு கைகளையும் மடிக்காது நேராக வைத் துக்கொண்டு சுவரைத் தள்ளுங்கள். தள்ளும் போது முன்னிருக்கும் கால்சற்று மடிந்திருக்க பின்னிருக்கும் காலின் குதிப் பகுதியில் பாரம் தங்குமாறு செய்யுங்கள். அடுத்த தடவை கைகால்களை மாற்றிவைத்துச் செய்யுங் கள்.

இரண்டாவது படத்தில் காட்டிய அடுத்த பயிற்சியின் போது உங்கள் கைகள் சற்று மடிந்திருக்க சுவரைத் தள்ளுங்கள். இதுபாதத் தின் முற்பகுதியில் பாரம் தங்குமாறு செய் யும்.உண்மையில் இவை உங்கள் தசை களைப் பலமுறச் செய்து அதனால் எதிர் காலத்தில் வலிகள் தொடர்ந்து வேதனை அளிப்பதைக் குறைக்க உதவும்.

பாதத்தின் தசைநார்களுக்குக் கொடுக்கும் பயிற்சிகளில் துவாயைச் சுருட்டல், மார்பிள் அல்லது நாணயங்களை கால் விரல்களால் பொறுக்கல் மற்றும் காற்பெருவிரல் தட்டல் பயிற்சிகள் சுலபமானவை.பயிற்சிகளின் பெயர்களைக் கேட்டவுடன் பயந்து விடாதீர் கள் .மிகவும் சுலபமானவை. தொடர்ந்து செய்ய நல்ல பலனையும் கொடுக்கும்.

துவாயைச் சுருட்டல் பயிற்சி – ஒரு துவாயை தரையில் விரி யுங்கள்.படத்தில் காட்டியபடி உங்கள் பாதத்தை அதன் ஒரு ஓரத்தில் வைத்த படி அரு கே ஒரு நாற் காலியில் உட்காருங் கள். துணி யை உங்கள் கால்விரல் நுனிகளால் பற்றி உங்கள் பக்கமாக சுருட்டிச் சுருட்டி இழுங்கள்.பல முறை இவ்வாறு செய்யுங்கள்.



இன்னுமொரு பயிற்சி கால் விரல்க ளால் மார்பிள்களை பொறுக்குவதாகும். சில மார்பிள்களை அல்லது சில நாண யங்களை அல்லது சோடா மூடிகளை நிலத் தில் போட்டு வையுங்கள்.அருகில் உயரம் குறைந்த ஒரு கோப்பையை வையுங்கள்.

உங்கள் குதிகால் நிலத்தில் படும் படி உட்கார்ந்து கொண்டு மார்பிள்களை உங்கள் கால் விரல்களால் பொறுக்கி எடுத்து அருகில் ஏற்கனவே வைத்த கோப்பைக்குள் போடுங்கள். நாணயங்களை இவ்வாறு பொறுக்கிப் போடுவது இன்னும்நல்ல பயிற்சி யாகும்.

கால்விரல் (Toe Tab) தட்டல் இன்னு மொரு நல்ல பயிற்சியாகும்.இது ஒரு நுணுக்கமான ஆனால் சிறந்த பயிற்சியா கும். உங்கள் பாதத்தின் குதிப் பகுதி தரை யில் திடமாக இருக்கும்படி வைத்தபடி கால் விரல்களை மட்டும் மேலே உயர்த்துங்கள். இப்பொழுது நான்கு விரல்கள் உயர்ந் தபடி நிற்க பெருவிரலால் மாத்திரம் தரையைத் தட்டுங்கள். இனி மறுபுறமாகச் செய்யுங்கள். அதாவது பெருவிரல் உயர்ந்து நிற்க மற்ற நான்கு விரல்களால் தரையைத் தட்டுங்கள்.

இவ்வாறு பலமுறை செய்ய வேண்டும். ஒரு தவணையில் பத்து முறையாவது செய் யுங்கள். படிப்படியாக ஒவ்வொரு தவணை யிலும் ஐம்பது முறையாவது செய்யும் படி பயிற்சியை அதிகரியுங்கள்.



குதியில் ஏற்பட்ட அழற்சியைத் தணிக்க ஐஸ் மசாச் சிலருக்கு உதவக் கூடும். ஒரு சிறிய பேப்பர் கோப்பையில் நீர்ர வைத்து குளிர்சாதனப் பெட்டி மூலம் ஐஸ் ஆக்குங் கள். கோப்பையிலிருந்து ஐஸ் வெளியே தெரியும் பகுதியை பாதத்தின் வலிக்கும் இடத்தின் மேல் வைத்து அழுத்துங்கள். மிதமான அழுத்தத்துடன் சுற்றுவட்டமாக 5 முதல் 10 நிமிடங்களுக்கு அழுத்துங்கள். இதுவும் குதிவாதத்தின் வலியைத் தணிக்க உதவும்.

ஆழம் குறைந்த பேசினுக்குள் ஐஸ் கலந்த நீரினுள் பாதத்தை 5 முதல் 10 நிமிடங்களுக்கு வைத்திருப்பதையும் மேலை நாட்டு வைத்தியர்கள் சிபார்சு செய்கிறார்கள். ஆயினும் எம்மவர்கள் குறைந்த சூடுள்ள நீரில் பாதத்தை வைத்திருப்பது கூடிய சுகத்தைக் கொடுப்பதாக உணர்கிறார்கள்.

வலியையும் அழற்சியையும் தணிக்கும் வலிநிவாரண மாத்திரைகளும் உங்களுக்கு நிச்சயம் உதவும். வைத்தியரின் ஆலோச னையுடன் குறிப்பிட்ட காலத்திற்கு அத்தகைய மாத்திரைகள் நீங்கள் உட்கொள்ள சுகம் தெரியும். சிலவேளை ஹைட்ரோகோட்டி சோன் ஊசி மருந்தை வலி அதிகமுள்ள இடத் தில் உங்கள் வைத்தியர் போடவும் கூடும்.

உங்களுக்கு ஏற்ற சிகிச்சை முறையை வைத்தியரின் ஆலோசனையுடன் தீர்மானி யுங்கள். மனந்தளராமல் தொடர்ந்து செய் யுங்கள் சுகம் கிடைக்கும்.




## தலைவலிக்கு தலையாய காரணி!



“நோய் நாடி நோய் முதல் நாடி...” என்று கூறுகிறார் வள்ளுவர். அதாவது நோயின் காரணத்தை அறிந்து மருந்துகொடுத் தால், நோயை முற்றிலும் நீக்கலாம் என்பதே அதன் அர்த்தம் . அப்படிப் பெரும்பாலானவர்களை வாட்டி வதைக்கும் தலை வலியின் காரணியை அறிந்துகொண்டால் அதிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

- மலச்சிக்கல் இருந்தால் தலைவலி உண்டாகும்.
- மன உளைச்சல்,உறக்கமின்மை, படபடப்பு இருந்தால் வரும்.
- காது,மூக்கு ,தொண்டை,பல்முதலியவற்றில் ஏற்படும் தொற்றுக்களாலும் தலைவலி வரும்.
- தலையில் ஏதாவது அடிபட்ட காயம் இருந்தாலும் தலைவலிக்கும்.
- கண்ணின் குறைபாடுகளும் தலைவலியாய் பிரதிபலிக்கும்.
- தொடர்ந்து மது மற்றும் போதை மருந்துகளை உபயோகித்தால் கடுமையான தலைவலி ஏற்படும்.
- நோய்க்காக நாம் சாப்பிடும் மருந்துகளின் ஒவ்வாமையால் தலைவலி வரும்.
- சாப்பிடாமல் இருப்பது, உடம்பில் சர்க்கரை சத்துக்குறைந்தாலும் தலைவலி ஏற்படும்.

## வெயிலில் சென்றால் கண் எரிகிறதா?




சிலருக்கு வெயிலில் சென்றாலே கண்களில் எரிச்சல் மற்றும் வறட்சி என பாடாய்படுத்தும். கோடை காலத் தில் இந்த பாதிப்புகள் மேலும் அதிக மாகும். இதற்கு முக்கிய காரணம் தலை சுத்தமாக ... சுகாதாரமாக இல் லாமையே! தலையை சுத்தமாக வைத் துக் கொண்டால் கண்களை எப்போ தும் தொற்றுகளில் இருந்து பாதுகாக் கலாம்.

அதேபோல் வைரஸ் மற்றும் பக்டீரியா தொற்றுகளும் கூட கண் பாதிப்பை ஏற்படுத்தும். கோடை காலத்தில் இந்த தொற்று களின் வீரியம் அதிகமாகவே இருக்கும். தலையில் பொடுகு மற்றும் அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்ளவும். அப்படி தலை சுத்தமில்லாமல் இருக்கும் பட்சத்தில் கண், இமை, புருவம் ஆகியவற்றில் படிந்து இமையின் அருகில் இருக்கும் சுரப்பிகளில் சீழ்பிடித்து வெயிலில் எரிச்சல் ஆரம்பிக்கின்றன. ஆகையால் தலையை, முகத்தை சுத்தமாக, சுகாதாரமாக வைத்துக் கொள்ளவும்.

# இணைய ஊடகவழியில் கல்வியும் தகவல்களும் 2





**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
ஆசிரிய பயிற்றுவிப்பாளர் -ஊடக தகவல் கற்கை
ஆசிரியர் - தொடர்பாடல் ஊடகக்கல்வி
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

அட்டவணை 02 ஈ. -அஞ்சல், இணையத் தொடர்பு, வைத்திருப்போர் தொடர்பான புள்ளிவிபரங்களை 1994 இருந்து 2001 வரை வெளிப்படுத்துவதாக காணப்படுகிறது.


அட்டவணை -02

ஈ-அஞ்சல் இணையத் தொடர்பு வைத்திருப்போர்

| 1994 | 1997 | 1998 | 2000 | 2001 |
|---|---|---|---|---|
| 175 | 4110 | 19000 | 40497 | 61500 |

(மூலம் -மத்திய வங்கி புள்ளி விபர அறிக்கை)

இலங்கையின் 2004 ஆம் ஆண்டு இணையத்தளப் பயன்பாடு நூறுபேருக்கு 2.8 வீதமாகும். இணையத்தளத்தில் பதிவுள்ளவர்கள் தொகை 2000 ஐ விட 2006இல்



125800 ஆக அதிகரித்துள்ளதென தொலைத் தொடர்பு ஆணைக்குழு அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

பின்வரும் அட்டவணை-3 இல் இலங்கை வீட்டுத்துறை கணனிப் பயன்பாட்டு வீதத்தை காட்டுவதாக அமைகிறது.

அட்டவணை -3

| | மாகாணங்கள் | கொழும்பு | நகரம் | கிராமம் | தோட்டம் |
|---|---|---|---|---|---|
| கல்வி | 76.0 | 74.8 | 76.6 | 75.8 | 71.7 |
| சுயதொழில் | 15.3 | 12.8 | 17.5 | 14.2 | 22.9 |
| வியாபாரம் | 15.4 | 17.0 | 18.5 | 14.0 | 20.6 |
| ஓய்வுக்கு | 49.4 | 50.7 | 44.3 | 51.6 | 64.8 |
| உத்தியோகம் | 20.6 | 25.0 | 21.3 | 20.3 | 26.6 |
| மின்னஞ்சல் | 16.0 | 28.6 | 23.6 | 12.6 | 1.5 |
| இணையத்தளம் | 16.2 | 28.4 | 22.6 | 13.3 | 5.6 |
| ஏனையவை | 3.8 | 3.0 | 2.5 | 4.4 | 5.6 |

(மூலம்-குடிமதிப்பு புள்ளிவிபர அறிக்கை (2006/2007)

அட்டவணை 3இல் காட்டபட்ட தரவுகளின் படி கல்வி நடவடிக்கைகளுக்கும் ஓய்வுக்காகவும் கணனி அதிகளவில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

கிராமம், தோட்டம் பகுதிகளில் மின் அஞ்சல், இணையத்தள பயன்பாட்டு ஒப்பீட்டு ரீதியில் மிகத் தாழ் நிலையில் இருப்பதைக் காணமுடிகின்றது.

அட்டவணை 4 வீட்டுத் துறை மின்னஞ்சல் இணைய வசதி பெறும் மக்கள் வீதத்தின் இடைத்தூரத்தைக் கிலோ மீற்றரில் குறிப்பிட்டு விபரிக்கின்றது.

வீட்டு மின்னஞ்சல் இணைய வழி வெறும் இடைத்தூரம் அட்டவணை 04

இலங்கையில் 5-69 வயதுள்ளவர்களில் 88.8% மின் அஞ்சல் பயன்படுத்தும் அறவின்மை நிலவுவதாக 2006/2007 அறிக் கை புள்ளிவிபரம் குறிப்பிடுகின்றது. சுயமாகப் பயன்படுத்துபவர் 5.2%, மற்றவர் உதவியுடன் பயன்படுத்துபவர் 5.0% என கணிக்கப்பட்டுள்ளது.

தகவல்தொழில்நுட்ப இலத்திரனியல் ஊடகத்தில் கைத்தொலைபேசியின் பயன்பாடு மேற்கு மாகாணத்தில் அதிகமாக உள்ளது. (மேற்கு மாகாணம் -60%) , ஊவா மாகாணத்தில் மிகக் குறைந்த வீதாசாரத்தில் உள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 65.0% பயன்

அட்டவணை 04

| | 1km குறைவு | 1-3km | 3-6km | 6km | தெரியாதவர் |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 16.8 | 19.1 | 15.7 | 23.6 | 24.9 |
| கொழும்பு | 49.1 | 28.8 | 7.7 | 3.8 | 10.7 |
| நகரம் | 45.5 | 24.5 | 7.2 | 3.9 | 18.9 |
| கிராமம் | 13.3 | 18.9 | 17.4 | 26.1 | 24.3 |
| தோட்டம் | 4.2 | 9.2 | 10.2 | 30.0 | 46.5 |

(மூலம் -குடிமதிப்பு புள்ளிவிபர அறிக்கை 2006/2007)

படுத்துகிறார்கள். பெரும்பாலும் ஆங்கில அறிவுடைய மக்கள் தொகுதியினரே பயன்படுத்துவதாக இவ்வறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

யுனிசெவ் -உலகச் சிறுவர் நிலை (2005) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் 300 மில்லியனுக்கு மேல் பிள்ளைகளுக்கு தகவல் மறுக்கப்பட்ட நிலை உள்ளதாகவும் அவர்களுக்கு தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி, பத்திரிகைகள் என்பன மறுக்கப்படுகின்றன என்றும் இதனால் போதிய தகவல் பெறும் வாய்ப்பின்றி பரந்துபட்ட அர்த்தத்தில் கல்வி மறுக்கப்பட்டவர்களாக பிள்ளைகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றது. இந் நிலைப்பாடுகள் கணனி மற்றும் இணைய வழி தகவல் தொடர்பாடல் தன்மைகளின் சாத்தியப்பாடுகளை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றன.

தகவலைப் பெறுவதற்கு முன்பு நூலகங்களை நாடிச் சென்ற மக்கள் திரள் இன்று இணையத் தளங்களை நோக்கி நகர்வடைவதை அவதானிக் கமுடிகின்றது. அச்சூடகப் பயன்பாட்டை இழிவளவாக்குவதில் இணைய வழி வாய்ப்புக்கள் முக்கிய பகுதியாக செலவாக்குச் செலுத்துகின்றது. (தொடரும்)

# ஜூன் 29 ஆம் திகதி 2010க்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்

## நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இந்த ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டத்தை ஜூன் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கவிருக்கின்றது என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய வரவு- செலவுத் திட்டத்திற்காக திட்டமிடல், நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலம் ஜூன் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் ஜூலை 23 ஆம் திகதி நிறைவு பெறும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி, பாராளுமன்ற தேர் தல்கள் இந்த வருடம் நடைபெற்றமை யினால் அரசாங்கம் இந்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காது மூன்று மாதங்களுக்கான கணக்கு வாக் கெடுப்பை சமர்ப்பித்தது.

கணக்கு வாக்கெடுப்பிற்கான மூன்று மாத காலம் நிறைவடைந்துள்ள நிலையில் அரச செலவினங்களுக்காக ஜனாதிபதி அரசியலமைப்பில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி அடுத்த மூன்று மாதங்களுக்கான அரச செலவினங்களுக்காக 44 ஆயிரத்து 14 கோடி ரூபாவை ஒதுக்கிக் கொண்டார்.

இந்நிலையிலேயே மீதமிருக்கின்ற ஆறு மாதங்களுக்கான வரவு செலவுத் திட்டமே ஜூன் மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. 2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் வழமை போல நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும்.

2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் ஜூலை மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கானஅமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (2-6)

# முத்துக்குமார் சிலை திறப்பு விழாவிற்கு தமிழகப் பொலிஸார் அனுமதி மறுப்பு

## தமிழுணர்வாளர்கள் அதிருப்தி தெரிவிப்பு

(கொழும்பு)

முத்துக்குமார் சிலை திறப்பு விழாவிற்கு பொலிஸ் அனுமதி மறுத்துள்ளது. பொதுக் கூட்டம் மட்டும் நடத்தலாம். ஆனால் மேடையில் முத்துக்குமார் சிலையை வைக்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

ஈழத்தமிழருக்காக தீக்குளித்து இறந்த முத்துக்குமாருக்கு முதன் முதலில் தஞ்சை மாவட்டத்தில் சிலை அமைக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டி நான்கு சாலைப்பிரிவில் புலவர் ரத்தினவேலு முத்துக்குமாருக்கு சிலை அமைக்க இடம் கொடுத்தார். இளந்தமிழர் இயக்கத்தினர் தானமாக பெற்ற இந்த இடத்தில் முத்துக்குமாருக்கு சிலை அமைக்கும் பணியை மேற் கொண்டு முடித்துள் ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இளந்தமிழர் இயக்கம் மற்றும் தமிழ் தேசிய பொதுவுடமை கட்சியினர் திருக்காட்டுப பள்ளியில் இருந்து சுடர் ஓட்டம் ஆரம்பித்து மாலை 5 மணிக்கு சிலை அருகே வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ் தேசிய பொதுவுடமைக் கட்சி பொதுச் செயலாளர் பெ.மணியரசன் சிலையைத் திறந்து வைக்கவிருந்தார். இச்சிலை திறப்பு விழாவில் புலமைப்பித்தன், காசி ஆனந்தன், முத்துக்குமார் தந்தை குமரேசன், இயக்குனர் ராம், இயக்குனர் புகழேந்தி தங்கராசு உட்பட பலர் கலந்து கொள்வதற்காக சிலை திறப்பு விழா இடத்திற்கு வந்து கொண்டிருந்தனர்.

ஆனால், இந்த சிலை திறப்பு விழாவிற்கு பொலிஸ் அனுமதி கொடுக்காததால் மாலை 5 மணிக்கு பொதுக் கூட்டம் மட்டும் நடைபெற்றது.முத்துக்குமாருக்குமுதன்முதலாகசிலை திறக்க முயற்சித்த போது பொலிஸ் அனு மதி மறுத்துள்ளதால் உலக தமிழுணர்வாளர்கள் அதிருப்தியில் இருக்கிறார்கள். (6)

### ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்தின்

# பொதுமன்னிப்பு குறித்த உத்தியோகபூர்வ ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை

(கொழும்பு)

சிரேஸ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகத்திற்கு பொது மன்னிப்பு வழங்குதல் தொடர்பான உத்தியோகபூர்வ ஆவணங்கள் இதுவரையில் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்திற்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் , ஜனாதிபதி பொதுமன்னிப்பு குறித்த சட்ட ஆவணங்கள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இன உணர்வுகளைத் தூண்டும் வகையிலான கட்டுரைகளை வெளியிட்ட காரணத்திற்காக ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகத்திற்கு இருபது ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. (2-6)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:- எஸ்.ஏ.சந்திரபவன்
புலமைப்புலரி பப்ளிகேஷன்

## மாதிரி பரீட்சை–03
## வினாத்தாள் –I


நேரம்- 45 நிமிடம்

❖ 01 தொடக்கம் 35 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக. 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. முதலில் தரப்பட்டுள்ள உரு போன்ற இன்னொரு உருவை எதிரேயுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.




2. முதலில் தரப்பட்டுள்ள படத்திலிருந்து சற்று வேறுபடும் படத்தை தெரிவு செய்க.




❖ கீழேயுள்ள ஒவ்வொரு கூட்டிலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சில சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சொல் இடம்பெறாமல் உள்ளது அக்கூட்டினுள் வரவேண்டிய மிகப் பொருத்தமான சொல்லை எதிரேயுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்க.


03.
- ★ பச்சை
- ★ சொண்டு
- ★ .....?.....
- ★ பிள்ளை


1) கத்தும்
2) சொல்லும்
3) பேசும்

04.
- ★ புள்ளி
- ★ ....?......
- ★ துள்ளும்
- ★ புல்


1) சூரிய விழி
2) அகன்றபாதம்
4) நீள்தோகை

❖ தரப்பட்டுள்ள உருக்களின் போக்கினை அவதானித்து அடுத்துவரும் உருக் கோலத்தினைத் தெரிவு செய்க.


05. 



06. 


❖ உருக்களின் கணிதப் பிரசினங்களை இனங்கண்டு 07 ஆம் 08ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.



07. △ இக் குறியீட்டின் பெறுமதி 2 எனின், ⊞ இக் குறியீட்டின் பெறுமதி யாதாக இருக்கும்.
1. 4 2. 5 3. 6


08.  இக்குறியீட்டிலிருந்து  இக்குறியீட்டைக் கழித்தால் வரும் பெறுமதி யாது?
1. 2 3. 3 3. 4





மேலுள்ளது ஒரு வீதியாகும் .A எனும் நகரத்திலிருந்து B நகரம் வரை சென்ற ஒருவர்; மீண்டும் அங்கிருந்து C நகரம் வரை சென்றார்

09. Cயிலிருந்து Dவரையான தூரம் 5 கிலோமீற்றர் எனின் அவர் A யிலிருந்து B வரை சென்ற தூரம் யாதாக இருக்கும்.
1.20 கி.மீ. 2.25 கி.மீ 3. 30 கி.மீ

10. அவர் A யில் இருந்து Cவரை வாகனத்தில் செல்வதற்கு 21 நிமிடங் கள் தேவைப்பட்டன. எனின் அவர் C யில் இருந்து D வரை அதே வேகத்தில் செல்ல எவ்வளவு நேரம் தேவைப்படும்?
1.3 நிமிடம் 2. 4 நிமிடம் 3. 5 நிமிடம்

11. 
இங்கு நிழற்றப்பட்டுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?
1. 2 3.4 3.6




12. மேலே அளக்கப்படும் பென்சிலின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்?
1.3.செ.மீ. 2. 4.செ.மீ. 3. 5.செ.மீ.


13. ராஜதுரையின் வயதைவிட தர்மதுரையின் வயது 4 அதிகமாகும். தர்மதுரையின் வயது 40 எனின் ராஜதுரையின் வயது யாது?
1.36 வயது 2. 40 வயது 3. 44 வயது

சுசிலா வாங்கிய புத்தகத்திற்கு ரமணி பணம் கொடுத்தாள்.ரமணி வாங்கிய புத்தகத்திற்கு சுசிலா பணம் கொடுத்தாள். ரமணி வாங்கிய புத்தகத்தின் விலை 95 ரூபாவாகும். சுசிலா வாங்கிய புத்தகத்தின் விலை 80 ரூபா ஆகும்.

14. 100 ரூபா தாள் நாணயத்தைக் கொடுத்த சுசிலாவுக்கு கடைக்காரர் கொடுக்க வேண்டிய மீதி எவ்வளவு?
1.5 ரூபா 2.10 ரூபா 3.20 ரூபா

15. வேறு பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக சுசிலா 60 ரூபாவும் ரமணி 55 ரூபாவும் செலவழித்தனர். எனின் அன்று அதிக பணம் செலவழித்தவர் யார்?
1.ரமணி 2. சுசிலா 3.கூறமுடியாது.


16. ஒரு தீட்டிய நிலையில் உள்ள பென்சிலின் சரியான உரு எதுவெனத் தெரிவு செய்க.




17. மாணவர்கள் வகுப்பறையில் சென்று விளையாடினார்கள். இந்த வாக்கியத்தில் வகுப்பறை என்பதற்குப் பதிலாக அதே இடத்தில் இடக்கூடிய பொருத்தமான சொல் எது?
1.சிற்றுண்டிச்சாலை 2. காரியாலயம் 4. மைதானம்

18. பசி எனில் உணவு உண்ணல் தாகம் எனில் ....? ..... அருந்துதல் வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய சொல்

1. இளநீர் 2. நீர் 3. தேநீர்

19.  இச் சதுர வடிவக் கடதாசியை முறிகோட்டின் வழியே இரண்டு தடவைகள் மடித்தால் கிடைக்கும் வடிவம் யாது?

1. செவ்வகம் 2. முக்கோணம் 3. சதுரம்

20. கீழே கூறப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகப் பொருத்தமான பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க

1. சந்தையில் வெட்டிச் சமைத்த மீனை வீட்டில் வாங்கினார்கள்
2. சந்தையில் வாங்கிய மீனை வீட்டில் வெட்டிச் சமைத்தார்கள்
3. வீட்டில் வெட்டிச் சமைத்த மீனை சந்தையில் வாங்கினார்கள்.

❖ **கீழே ஆங்கில எழுத்துக்களாலும் இலக்கங்களாலும் ஒரு சொல் எழுதப்பட்டுள்ளன. அவற்றினை அவதானித்து விடை தருக.**

| | | |
|---|---|---|
| கடல் | - ANL | - 325 |
| பலம் | - KMO | - 416 |


21. கலம் என்பதை ஆங்கில எழுத்துக்களில் எழுதினால் வரும் விடை யாது?

1. AKM 2. AKO 3. AMO

22. படல் என்பதை இலக்கங்களில் எழுதினால் வரும் விடை எது?

1. 425 2. 452 3. 423

❖ **கார்மேகன் எனும் சிறுவன் வீட்டிலிருந்து பாடசாலை வரை நடந்து சென்ற பாதை கீழே காட்டப்பட்டுள்ளது.**





23. அவன் அதிக தடவை எத்திசையை நோக்கி நடந்திருக்கின்றான்?

1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு


24. அவன் பாடசாலையை சென்றடைவதற்குள் திரும்பிய திருப்பங்கள் எத்தனை?

1. பத்து 2. பதினொன்று 3. பன்னிரண்டு




25. மேலுள்ள கோலத்தில் வினாக்குறியிடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய இலக்கம் யாது?

1. 12 2. 22 3. 32

26.  அருகே காட்டப்பட்டுள்ள நான்கு குச்சிகளிலும் உள்ள துண்டங்களில் நிழற்றப்பட்டுள்ள துண்டங்களின் பின்னம் யாது?

1) $\frac{1}{16}$ 2) $\frac{4}{16}$ 3) $\frac{12}{16}$


27. டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடங்கிய ஒரு கலை நிகழ்ச்சி முழுமையாக 5 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. எனவே அது முடிவடைந்த திகதி யாதாக இருக்கும்?

1. 13ஆம் திகதி 2. 14ஆம் திகதி 3. 15ஆம் திகதி

28. காலை 9.30 மணிக்குத் தொடங்கிய பரீட்சை ஒன்று 15 நிமிட இடைவேளை உள்ளடங்கலாக 12 மணிக்கு முடிவடைந்தது. எனவே அப்பரீட்சைக்குரிய நேரம் என்னவாக இருக்கும்?

1. 2 மணி 15 நிமிடங்கள் 2. 2 மணி 30 நிமிடங்கள்
3. 2 மணி 45 நிடங்கள்

29. கீழுள்ள 5 உருக்களையும் அவதானித்து அவற்றை ஏறுவரிசைப் படுத்தினால் கிடைக்கும் விடையினைத் தெரிவு செய்க.





1) EABCA 2) DCBAE 3) DCBEA

30. கீழே தரப்பட்டுள்ள பெயர்களில் இரண்டு அத்தொகுதியில் இடம்பெறப் பொருத்தமற்றது. அவ்வுருவைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A யாழ்ப்பாணம் | B பொலனறுவை | C சிகிரியா |
| D புத்தளம் | E கொழும்பு | F கதிர்காமம் |


1) உரு C யும் F உம்
2) உரு E யும் F உம்
3) உரு B யும் C உம்

31. கீழே A,B,C என மூன்று உருக்கள் தரப்பட்டுள்ளன. அவை தொடர்பான கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.




1. உரு A யை விட உரு B பெரியது
2. உரு B யை விட உரு C சிறியது
3. உரு C யை விட உரு A பெரியது

32. கீழே உள்ள 5 உருக்கள் தொடர்பான கீழுள்ள கூற்றுக்களில் பிழையான கூற்றினைத் தெரிவு செய்க




1. உரு A யும் C யும் தொடர்புடையவை
2. உரு B யும் E யும் தொடர்புடையவை
3. உரு B யும் C யும் தொடர்புடையவை

வண்ண வண்ண மேனியாம்
வண்ணத்துப் பூச்சியாம்
வண்ண .......?...... மீதிலே
வந்து அமர்ந்து போகுதாம்

33. கவிதையில் இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொல் எதுவெனத் தெரிவு செய்க.

1. மலர் 2. நிறம் 3. தண்டு

34. இன்று வெள்ளிக்கிழமை. நாளை 09 ஆம் திகதி. நேற்று 07 ஆம் திகதி எனில் நாளை மறுதினம் என்ன கிழமை ஆகும்.

1. திங்கட்கிழமை 2. ஞாயிற்றுக்கிழமை
3. சனிக்கிழமை


35. எனது நிறையும் தங்கையின் நிறையும் சேர்ந்தால் எமது தந்தையின் நிறையாகும். எனது நிறை 32 கிலோ ஆகும். தந்தையின் நிறை 60 கிலோ எனில் தங்கையின் நிறை யாது?

1. 22 kg 2. 26 kg 3. 28kg

36. பிரவினின் தந்தை சுரேனுக்குச் சித்தப்பாவாகும். சுரேனின் தாயிற்கு பிரவீனின் அக்கா என்ன முறையாகும்.

1. சித்தி முறையாகும் 2. தங்கை முறையாகும்
3. மகள் முறையாகும்

❖ **கீழுள்ள உருவினை அவதானித்து 37-40 வரையான வினாக்களுக்கு விடை தருக.**




37. இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள துண்டங்களின் முழுமையான எண்ணிக்கையாது?
(..........................)

38. நிறந்தீட்டப்பட்டுள்ள கட்டங்களின் எண்ணிக்கையை விட நிறந்தீட்டப்படாத கட்டங்களின் எண்ணிக்கை அதிகமாயின் A எனவும் குறைவாயின் B எனவும் எழுதுக.

39. கேதீஸ், பிரகாஷ் ஆகிய இருவரில் அதிக தூரம் நடந்தவர் யார்? (.............)

40. 

மேலுள்ள உருவின் ஒரு சிறிய கட்டத்தின் ஒரு பக்க நீளம் 2 m எனின் கேதீஸ் நடந்த தூரம் எத்தனை மீற்றர்கள் ஆகும். (....................)

# வைகாசி மாதப் பலன்கள்

## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்)

**நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மிதுன ராசி நேயர்களே!**

வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இராசிநாதன் புதன் மே 30 ஆம் தேதி வரை இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே எதிர்பார்த்த வரவுகளும் எதிர்பாராத வரவுகளும் கிடைக்கும். பத்தில் குரு சஞ்சரிப்பதால் தொழில் மற்றும் உத்தியோகத்தில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். கூட்டாளிகளை மாற்றம் செய்ய முன்வருவீர்கள். கூடுதல் இலாபம் கிடைக்க வழியென்ன என்று யோசிப்பீர்கள்.

பத்தாமிடத்து குரு பதவி மாற்றம் தரும் குருவல்லவா? என்ற சிந்தனை மேலோங்கும். குரு தனது சொந்த வீட்டில் உலா வருவதால் பாதிப்புக்களை அதிகம் வழங்காது. அதே சமயத்தில் அர்த்தாஷ்டமச்சனி வக்ரமாக இருந்து இதுவரை மனநிம்மதியை இழக்கச் செய்த நிலை இனி மாறும். சனியும் வக்ர நிவர்த்தியாகி குருவின் பார்வையும் அந்தச் சனியின் மீது பதிவதால் கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் இனி அகலும்.

படிப்படியாக முன்னேற்றம் காணவும் பக்கபலமாக இருக்கும் நபர்களால் பிரச்சினைகள் ஏற்படாதிருக்கவும் முறையான வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு சில கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மாதக்கடைசியில் சில மாற்றங்களும் ஏற்றங்களும் உருவாகும்.

மே 16 ஆம் திகதி விரய ஸ்தானாதிபதி சுக்ரன் உங்கள் இராசியில் சஞ்சரிக்கிறார். 5, 12 க்கு அதிபதி இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் பெரும் விரயம் ஏற்படலாம். அவர்களின் கல்வி நலன் கருதியும் கல்யாண வாய்ப்புகளை முன்னிட்டும் பெருந்தொகை ஒன்றைச் செலவிடுவீர்கள். பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும்.

மே 27 ஆம் திகதி கடக இராசியில் இருந்து சிங்க இராசிக்கு செவ்வாய் பெயர்ச்சியாகிறார்.

இதன் விளைவாக ஒரு சிலருக்கு உத்தியோக மாற்றம் உருவாகலாம். வீடு மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்பவர்கள் சுயஜாதக அடிப்படையில் பார்த்து மாறிக் கொள்வது நல்லது. அங்காரக வழிபாடு உடன்பிறப்புகளிடம் ஒற்றுமையை உருவாக்கும்.

மே27 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். அர்த்தாஷ்டமச் சனி வக்ர நிவர்த்தியானால் அதன் ஆதிக்கம் கூடுமல்லவா? இருந்தாலும் நீங்கள் செய்த புண்ணியம் அதிசார குருவின் பார்வை அதன் மீது பதிவது தான். எனவே மலைபோல் வந்த துயர் பனி போல் விலகும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

மே 31 ஆம் திகதி ரிஷப இராசியில் புதனும் ஜுன் 10 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரனும் சஞ்சரிக்க போகிறார்கள். இதனால் ஆரோக்கியத்தில் சிறு சிறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். நீண்டதூர பயணங்களை ஒரு சிலர் மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். மாமன், மைத்துனர் வழியில் அனுசரித்துச் செல்வது நல்லது. வாயில் தேடி வரன்கள் வந்து சேரும். நீண்ட நாளாக பேசி விட்டுப் போன வரன்கள் மீண்டும் வந்து சேரலாம். நபர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். இம் மாதம் ஆனைமுகப் பெருமானை வழிபட்டு ஆனந்தம் காணுங்கள்.

## கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

**பொதுநலத்தில் ஈடுபட்டு புகழைக் குவிக்கும் கடக இராசி நேயர்களே!**

வைகாசி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வளர்ச்சி கூடும் என்றே சொல்ல வேண்டும். குருவின் பார்வை பலத்தால் குழப்பங்கள் தீரும். குதூகலம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். நல்ல காரியங்கள் பலவும் நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகும் மாதமாகவே இம் மாதத்தைக் கருதலாம்.

இதுவரை இருந்த எதிர்ப்புகள் அகலும். இல்லம் தேடி வரும் நபர்களால் இனிய காரியம் ஒன்று நடைபெறப்போகிறது. செவ்வாய் நீச்ச கதியில் இருந்து இம்மாதம் விடுபடுகிறது. எனவே நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க இயலும். குரு மங்கள யோகமும் உங்கள் இராசிநாதன் சந்திரன் உச்சம் பெற்று உலா வரும் விதத்தில் மாதத் தொடக்கம் அமைவதாலும் வருமானம் திருப்தி தரும். தொழில் ரீதியாக எடுத்த புதிய முயற்சிகள் யாவும் வெற்றி பெறும்.

தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றும் ஆற்றல் உங்கள் மனோ சக்திக்கு உண்டு. எனவே எதிரிகளைத் தேடிச் சென்று எதிர்ப்புக்களை வென்று உங்கள் காரியங்கள் அனைத்தையும் முடித்துக் கொள்வீர்கள். இம்மாதம் சனியும் வக்ர நிவர்த்தியாவதால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர் பகைகளும் உருவாகலாம். திடீர் செலவுகளும் ஏற்படும் சூழ்நிலை உண்டு. சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் அறிந்து அதற்குரிய பரிகாரங்களை மேற்கொண் டால் நல்ல வாய்ப்புக்கள் இல் லம் தேடி வரும்.

மே 16 ஆம் திகதி மிதுன இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 4, 11 க்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகும். ஒரு சிலர் வீட்டை மாற்றிக் கொள்ள நினைப்பர். என்ன இருந்தாலும் வாகன பழுதுகளைச் சந்திக்காமல் இருக்க இயலாது. பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம்.

மே 27 ஆம் திகதி சிங்க இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை நீச்ச கதியில் சஞ்சரித்து வந்த செவ்வாய் இப்பொழுது மாற்றமடைகிறார். இது நன்மை தான். 5,10 க்கு அதிபதி 2 இல் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி மேலோங்கும். பிள்ளைகள் வழியிலும் பெருமை வந்து சேரும்.

மே27 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். இக் காலத்தில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது மற்றும் குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை பெற முடியும். தொழிலில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

**சிவல்புரி சிங்காரம்**

மே 31 ஆம் திகதி இடப இராசியில் சஞ்சரிக்கப் போகும் புதனின் பலத்தால் உடன் பிறப்புகளுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். விரயத்திற்கேற்ற இலாபம் வந்து சேரும். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். அந்நியதேச பயணம் எண்ணிய படியே நடைபெறும். ஜுன் 10 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்க போவதால் அரசியல் வாதிகளுக்கு பொறுப்புகள் கூடும். பரபரப்போடு புணிபுரிவீர்கள். பிரமுகர்களின் சந்திப்பால் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். தாய் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் செல்முத்துக்குமரனை வழிபட்டு செல்வ வளத்தை பெருக்கிக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

## கட்சி உறுப்பினர்கள் வெளியிட்டதவறான கருத்துகளே தேர்தல் தோல்விக்கு காரணம்

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)

கட்சி உறுப்பினர்களினால் வெளியிடப்பட்ட பொறுப்புணர்வற்ற கருத்துக்களே தேர்தல் தோல்விக்கு காரணம் என அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான படையினரின் வெற்றி தொடர்பில் சில ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துக்கள் மக்களுக்கும் கட்சிக்கும் இடையிலான இடைவெளியை அதிகரித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

கண்டி யட்டிநுவர பகுதியில் நடைபெற்ற ஜாதிக ஜயவ எனப்படும் கட்சி உறுப்பினர்களை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

கிளிநொச்சியை கைப்பற்றிய போது படையினர் மதவாச்சியை கைப்பற்றியுள்ளதாகவும் தொப்பிகல பிரதேசத்தைச் கைப்பற்றிய போது அது ஓர் வனாந்திரப் பிரதேசம் எனவும் சில உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டதாகவும் இவ்வாறான பொறுப்புணர்ச்சியற்ற கருத்துக்களினால் மக்கள் கட்சியின் மீது அதிருப்தியடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சஜித் பிரேமதாஸவின் ஜாதிக ஜவய திட்டத்தை கைவிடுமாறு கட்சியின் உயர் பீடம் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கட்சித் தலைமைத்துவம் அவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை எனவும் இந்தத் திட்டம் குறித்து கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் கவனம் செலுத்தி வருவதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (2-6)

## கொழும்பு நகரை கண்காணிப்பதற்கு 100 சீசீரீவி கமராக்கள் பொருத்தப்படவுள்ளன

(கொழும்பு)

கொழும்பு நகரில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் சுமார் 100சீசீரீவி கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரில் இடம்பெறக் கூடிய செயல்கள் மற்றும் வீதிப் போக்குவரத்து விதி மீறல் சம்பவங்கள் குறித்து கமராக்களின் மூலம் கண்கணிக்கப்படவுள்ளன.

சீசீரீவி கமரா கண்காணிப்பு தொழில் நுட்பம் தொடர்பில் பயிற்சிகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. எஸ்.பி. பெர்னாண்டோ உள்ளிட்ட ஐந்து உத்தியோகத்தர்கள் சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ளனர்.

ஒரு வார காலம் இவர்கள் இந்தப் பயிற்சி நெறியில் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மஹிந்த சிந்தனையின் மூலம் பாதுகாப்பான நகரம் என்ற தொனிப்பொருளில் அடுத்த மாதமளவில் சீசீரீவி கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. போக்குவரத்து சிக்கல்களை கட்டுப்படுத்தவும் குற்றச் செயல்களை மட்டுப்படுத்தவும் அநேக நாடுகளில் கமராக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்குலக நாடுகளில் அதிகளவு இவ்வாறான கமராக்களை காணக்கூடியதாக உள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலிஸ் மா அதிபர் தெரிவிக்கும் போது,

குற்றவாளிகளைக் கண்டறிவதை இலகுவாக்கும் நோக்கிலும் வாகனப் போக்குவரத்து நெருக்கடியைத் தடுப்பதற்கான உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் பாதுகாப்பு கமராக்கள் கொழும்பு நகரில் பொருத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டத்திற்காக 300 மில்லியன் ரூபா செலவாகும் என்றார். (2-6)

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கின் கல்வி மறு சீரமைப்பில் விசேட கவனம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கல்வித்துறையில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் விரைவில் மதிப்பீடு ஒன்றை செய்யவுள்ளோம். முக்கியமாக கல்வி மறு சீரமைப்பு விடயத்தில் வடக்கு- கிழக்கு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்ற கல்வித்துறை மறுசீரமைப்பு தொடர்பாக விபரிக்கையிலேயேஅவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்பதனை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கடந்த மூன்று தசாப்தங்களாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்பதனை கவனத்திற்கொண்டு இந்த விசேட அவதானத்தை செலுத்தவுள்ளோம்.

முக்கியமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற ஆசிரியர், அதிபர் மற்றும் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை தொடர்பில் விரைவில் மதிப்பீடு ஒன்றை செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

மதிப்பீடு செய்வதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம். மேலும் வடக்கு- கிழக்கு கல்வி மேம்பாடு தொடர்பில் வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்புகின்றோம்.

எனவே இது தொடர்பில் வடக்கு -கிழக்கு மாகாண சபைகளின் ஒத்துழைப்பு தேவையாகும் என்றார். (2-6)

## மீண்டும் மிரட்டும் ஐஸ்லாந்து எரிமலை

(ஐஸ்லாந்து)

ஐஸ்லாந்தில் மீண்டும் எரிமலை சீற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த முறை எரிமலை சீற்றம் ஏற்பட்ட போது அதன் துகள்கள் பெரும் பகுதியை ஆக்கிரமித்ததையடுத்து இந்தியா உட்பட பல நாடுகளில் விமான போக்கு வரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

பயணிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகினர். பல விமான கம்பெனிகள் கோடிக் கணக்கில் நஷ்டத்தை சந்தித்தன. தற்போது மீண்டும் எரிமலை சீற்றம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து மோசமான வானிலை மற்றும் புகை மண்டலத்தால் விமான போக்கு வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் முக்கிய விமான நிலையங்களை 2 நாட்கள் மூடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (2-6)

# அணுஆயுதம் சுமந்துசென்று தாக்கும் வல்லமைகொண்ட அக்னி-2 ஏவுகணை

## இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை

(பாலசோர்)

எதிரிகளின் இலக்கை துல்லியமாக தாக்கும் வல்லமை கொண்ட அக்னி-2 ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக நேற்று சோதித்தது.

ஒரிசா மாநிலம் பாலசோர் கடற்கரையில் இருந்து நடத்தப்பட்ட இந்த சோதனை உலக அளவில் இந்தியாவுக்கு கூடுதல் மதிப்பை உயர்த்தும் என்றால் மிகையாக இருக்க முடியாது.

ஏனெனில் கடந்த மார்ச் மாதம் விண்ணில் ஏவப்பட்ட அக்னி -1 ஏவுகணை 700 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் வல்லமை கொண்டது.

தற்போது இவ் ஏவுகணை செல்லும் தூரம் இரண்டரை மடங்கு அதிகரித்திருக்கிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் கடலில் உள்ள எதிரிகளின் இலக்கை கப்பலில் இருந்து தாக்கும் வல்லமை கொண்ட பிரிதிவி-2 சிறியரக ஏவுகணை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதனையடுத்து நேற்று மேலும் ஒரு சோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த



அக்னி-2 ஏவுகணை அணுகுண்டை சுமந்து சென்று சுமார் 2 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் வல்லமை கொண்டது.17 தொன் எடை கொண்ட இந்த ஏவுகணை ஆயிரம் தொன் எடையை சுமக்கும் வல்லமை கொண்டது. (6)

# இலங்கை செல்லும் சல்மானுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்கள்

இலங்கையில் நடைபெற உள்ள திரைப்பட விழாவில் கலந்து கொள்ள எதிர்ப்பு தெரிவித்து மும்பையில் நடிகர் சல்மான்கான் வீட்டு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற தமிழர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்திய சர்வதேச திரைப்பட விழா இலங்கை தலைநகர் கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த விழாவின் தூதராக அமிதாப்பச்சன் நியமிக்கப்பட்டார். இந்திய சர்வதேச திரைப்பட விழா இலங்கையில் நடைபெறுவதற்கு பல்வேறு தமிழ் அமைப்புக்களும் அரசியல் பிரமுகர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

## பாரதச் செய்திகள்

இந்த எதிர்ப்பை தொடர்ந்து கடந்த சில வாரங்களுக்கு முன்பு பிரபல பாலிவுட் நடிகர் அமிதாப்பச்சன் வீட்டு முன்பு நாம் தமிழர் இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் மற்றவர்களின் மனம் புண்படுமாறு எந்தவொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்கமாட்டேன் என்று அமிதாப்பச்சன் தெரிவித்தார்.

ஆனால் உறுதியாக எந்தவொரு அறிவிப்பையும் அமிதாப்பச்சன் தெரிவிக்கவில்லை. இதனால் கடந்த மாதம் 11 ஆம் திகதி அன்று மீண்டும் நாம் தமிழர் இயக்கத்தினர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்பிறகு தூதராக நியமிக்கப்பட்ட அமிதாப்பச்சன் அதிலிருந்து விலகினார். இதனையடுத்து புதிய விழா தூதராக பிரபல இந்தி நடிகர் சல்மான்கான் அறிவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மும்பை ஆந்திராவில் உள்ள சல்மான்கான் வீட்டை முற்றுகையிட்டு பல்வேறு தமிழ் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதி கேட்டனர். ஆனால் பொலிஸார் அனுமதி கொடுக்கவில்லை. இந்த நிலையில் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக தமிழ் அமைப்புகள் தெரிவித்தன.

இதனால் சல்மான்கான் வீட்டு முன்பு பொலிஸார் குவிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த சல்மான்கான் வீடு நோக்கி திரளான தமிழர்கள் வந்தனர்.

அப்போது அங்கிருந்த பொலிஸார் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றதாக கூறி அவர்களை கைது செய்து வானில் ஏற்றி சென்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (2-6)

# பிரபல எழுத்தாளர் அனுராதா ரமணன் மாரடைப்பால் மரணமானார்

(சென்னை)

பிரபல எழுத்தாளர் அனுராதா ரமணன் சென்னையில் நேற்றுமுன்தினம் மரணமடைந்தார். அவருக்கு வயது 62.

எழுத்தாளர் அனுராதா ரமணன் நாளைக்கு நேரமில்லை,ஒரு வீடு இருவாசல், நித்தம் ஒரு நிலா, முதல் காதல் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாவல்களையும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குறுநாவல்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகதைகள் ஆகியவற்றை எழுதி உள்ளார்.

இவர் எழுதிய சிறை, கூட்டுப்புழுக்கள், ஒரு மலரின் பயணம், ஒரு வீடு இருவாசல் ஆகிய படைப்புகள் திரைப்படமாக்கப்பட்டன அது போல பாசம் , புன்னகை அர்ச்சனைப் பூக்கள், பன்னீர் புஷ்பங்கள், உட்பட படைப்புகள் டி.வி. நாடகங்களாக்கப்பட்டன.

1978 ஆம் ஆண்டு சிறுகதைகளுக்கான போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் சிறந்த தேசிய சமூக நல எழுத்தாளருக்கான ராஜீவ் காந்தி விருது பெற்றார்.



இப்படி பல பதக்கங்களையும் விருதுகளையும் பெற்ற அனுராதா ரமணன் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்டார்.

இதைத்தொடர்ந்து அடையாறில் உள்ள மலர் மருத்துவமனையில் அடிக்கடி பரிசோதனை செய்வது வழக்கம் அது போல கடந்த 5ஆம் திகதி வழக்கமான பரிசோதனைக்காக அந்த ஆஸ்பத்திரிக்கு சென்றிருந்தார். அப்போது அவருக்கு சிறுநீரகம் செயல் இழந்தது தெரியவந்தது. சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் அவரது உடல்நிலை மோசம் அடைந்தது. டாக்டர்கள் சிகிச்சை அளித்தும் பலன் அளிக்காமல் மரணம் அடைந்தார். (2-6)

# ஜெயா டீ.வி. நிகழ்ச்சிகளிலிருந்து நடிகை குஷ்புவை நீக்க உத்தரவு;

(சென்னை)

நடிகை குஷ்பு திடீரென தி.மு.க.வில் உறுப்பினரானதால் ஜெயா டிவி நிகழ்ச்சிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி மற்றும் சீரியலும் திடீரென்று நிறுத்தப்பட்டன.

குஷ்பு தொடர்பான நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் ஜெயா டிவியில் ஒளிபரப்பக் கூடாது என்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு அதிரடி உத்தரவிடப்பட்டுள்ளது.

சினிமா மற்றும் டிவி சீரியலில் குஷ்பு நடித்து வருகிறார். அவர் ஜெயா டிவியில் ஜாக்பாட் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். இவரது கல்கி சீரியலும் ஜெயா டிவியில் வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை மறு ஒளிபரப்பாகி வந்தது. இந்நிலையில் குஷ்பு கடந்த 14ஆம் திகதி திடீரென தி.மு.கவில் சேர்ந்தார். அப்போது கட்சியில் சேர்ந்தால் நடிப்புத் தொழிலை நிறுத்தமாட்டேன். சினிமா மற்றும் டிவியில் தொடர்ந்து நடிப்பேன். டிவியில் எனது சீரியல்கள் ,நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒளிபரப்பாகும் என நிருபர்களிடம் தெரிவித்தார்.

முன்பு குஷ்பு நாயகியாக நடித்த கல்கி சீரியல் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றதால் அதன் தயாரிப்பாளருக்கும் ஜெயா டிவிக்கும் நல்ல வருமானம் கிடைத்தது. இதனால் கல்கி சீரியல் ஜெயா டிவியில் வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 11.30 மணிக்கு மீண்டும் மறு ஒளிபரப்பு செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் தி.மு.கவில் குஷ்பு சேர்ந்த பிறகு கல்கி சீரியல் உடனடியாக நிறுத்தப்பட்டது. இதற்கு பதிலாக பூவம் பொட்டும் சீரியல் ஒளிபரப்பாகிறது.



வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் குஷ்பு நடத்தும் ஜாக்பாட் நிகழ்ச்சி நீக்கப்பட்டு சரவெடி வேலு காமெடி நிகழ்ச்சி ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. இனி ஜெயா டிவி யில் நடிகை குஷ்பு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளோ விளம்பரம் ஏதும் ஒளிபரப்பக் கூடாது என்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு மேலிட நிர்வாகி மூலம் அதிரடி உத்தரவு போடப்பட்டுள்ளது. (2-6)

# வடிவேலுவுக்கு எதிரான மிரட்டல்; நடிகர் சிங்கமுத்து கைதானார்

(சென்னை)

சிரிப்பு நடிகர் வடிவேலுவின் மனேஜரை மிரட்டிய வழக்கில் காமெடி நடிகர் சிங்கமுத்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சென்னை விருகம்பாக்கத்தில் நடிகர் வடிவேலுவின் வீடு மற்றும் அலுவலகம் உள்ளது. அவர் நடிக்கும் காமெடி காட்சிகளின் ஸ்கிரிப்டை நடிகர் சிங்கமுத்து மற்றும் அவரது குழுவினர் தயாரித்து கொடுத்து நடிகர் வடிவேலுவுடன் நடித்து வந்தனர்.

இதற்கிடையே சிங்கமுத்து மீது நடிகர் வடிவேலு பொலிஸில் நில மோசடி புகார் கொடுத்தார். பதிலுக்கு சிங்கமுத்துவும் புகார் அளித்தார். பின் நடிகர் சிங்கமுத்து மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். தலைமறைவான அவர் உயர் நீதமன்றில் முன் ஜாமீன் பெற்றார்.

சமீபத்தில் விருகம் பாக்கத்தில் உள்ள வடிவேலுவின் அலுவலகத்திற்கு எதிரேயுள்ள சினிமா தயாரிப்பாளர் கண்ணனின் வீட்டு விசேஷத்திற்கு சிங்கமுத்து சென்றிருந்தார். அப்போது பட்டாசு வெடித்து சிங்கமுத்துவுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது. இது தொடர்பாகவும் பிரச்சினை ஏற்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை நடிகர் வடிவேலுவின் மனேஜர் சங்கர் பொலிஸில் புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளார். அதில் அலுவலகத்தில் நான் இருந்த போது என்னை நடிகர் சிங்கமுத்து சந்தித்தார். என்னுடன் தகராறில் ஈடுபட்டார். நான் வேலையில்லாமல் வீட்டில் இருக்கேன். உங்க ஆளு (வடிவேலு) ஷூட்டிங் போயிட்டானா. என் மீதான வழக்குகளை வாபஸ் வாங்கா விட்டால் தொலைத்து விடுவேன் என என்னை மிரட்டினார் எனக் கூறியுள்ளார்.



விசாரணை நடத்திய விருகம்பாக்கம் பொலிஸார் நடிகர் சிங்கமுத்துவை நேற்று முன்தினம் மாலை கைது செய்து சைதாப்பேட்டை நீதமன்றில் ஆஜர்படுத்தினர். தற்போது சிங்கமுத்துவை 15 நாள் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (2-6)

# கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்படுவர்

## பிரதமர் தெரிவிப்பு

அவசரகாலச் சட்டவிதிகளில் சில தளர்த்தப்பட்டிருந்த போதிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஆயிரத்து 900 பேரும் தடுத்து வைக்கப்படுவார்களென பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் இணையத்தளமொன்றிற்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிட்டார்.

யுத்தம் முடிவடைந்திருக்கும் நிலையில் அவசரகாலச்சட்ட விதிகளில் சிலவற்றை தளர்த்துவதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# அவுஸ்திரேலியாவில் மற்றும் ஒரு அகதிகள் படகு கண்டுபிடிப்பு

அவுஸ்திரேலியா, அஸ்மோ பவளப் பாறை பகுதியில் நேற்று முன்தினம் 43 சட்டவிரோத குடியேறிகளுடன் சென்ற மேலுமொரு படகு ஒன்று அவுஸ்திரேலிய சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த படகில் உள்ளவர்களை அடையாளம் காணும் பொருட்டு படகில் உள்ளோர் கிறிஸ்மஸ்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு சென்றவர்களில் இலங்கையர்களும் இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கடந்த 2009 ஆம் வருடம் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 873 ஆகும்.

எனினும் இந்த வருடத்தின் 4 மாத காலப் பகுதிக்குள் இரண்டாயிரத்து 782 பேர் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக படகுகளில் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# நிலவும் சீரற்ற காலநிலையால் விமான சேவைகள் இடைநிறுத்தம்

சீரற்ற காலநிலை காரணமாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று அதிகாலை புறப்பட்டுச் செல்லவிருந்த மற்றும் இலங்கையை வந்தடையவிருந்த விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

இத்தகவலை இலங்கை விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து வந்தடையவிருந்த விமானங்கள் இந்தியாவில் தரையிறக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அயர்லாந்தின் எரிமலை வெடிப்பினால், ஐரோப்பாவில் தொடர்ந்து பரவிவரும் சாம்பல் புகை மூட்டம் இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை போன்ற காரணங்களினால் நேற்று அதிகாலை இலங்கையிலிருந்து ஐரோப்பா புறப்படவிருந்த விமான சேவையொன்று இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# மத்திய கிழக்கு நாடுகளில் வெளிநாட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்க திட்டம்

மத்திய கிழக்கு நாடுகளில் வெளிநாட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக சவுதி அரேபியாவிலிருந்து வெளிவரும் அரேப் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வருடாந்தம் வெளிநாட்டுப் பணியாளர்களுக்காக வழங்கப்படும் விசாக்களைக் குறைப்பதற்கு சவுதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் தீர்மானித்துள்ளன.

குறிப்பாக வெளிநாட்டு பணியாளர்களின் தங்கி வாழ்வோருக்கு வழங்கப்படும் விசாக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தங்களது நாடுகளினது பிரஜைகளுக்கு தொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கு கூடுதலான தொழில் வாய்ப்புக்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த 2009 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட விசாக்களின் எண்ணிக்கையை ஐக்கிய அரபு இராச்சியம் 15 வீதத்தினால் குறைத்துக் கொண்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மொத்தமாக 1.54 மில்லியன் தொழில் விசாக்கள் வழங்கப்பட்டதாகவும், 2008 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 1.81 ஆகக் காணப்பட்டதாகவும் சவுதி அரேபியாவின் தொழில் அமைச்சர் அப்துல்லா அல் அஜிலான் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளின் மொத்த சனத்தொகையில் 40 வீதமானவர்கள் வெளிநாட்டுப் பணியாளர்கள் என்பதுடன் கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் 70 வீதமானவர்கள் வெளிநாட்டுப் பணியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு இலங்கை மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலானோர் தொழில் விசா பெற்றுக் கொண்டு நீண்டகாலமாகப் பணியாற்றியதுடன் நாள்தோறும் பெரும் எண்ணிக்கையிலானோர் தொழில்வாய்ப்புப் பெற்றுச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் போன்ற நாடுகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என பொருளியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறித்த நாடுகளது வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகங்கள் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# நான்கு ஆண்டுகளாக திருமலையில் இன்னல்படும் இடம்பெயர்ந்த மக்கள்

(கொழும்பு)

திருகோணமலையில் நான்கு ஆண்டுகள் ஆகியும் மக்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் யுத்தம் காரணமாக மூதூர் வெருகல் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்தார்கள்.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களில் குறிப்பிட்ட சில மக்களே எதுவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் மீள்குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

மணல்சேனை, பட்டித்திடல், கிளிவெட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 1700 குடும்பங்கள் இதுவரை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படாமல் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மூதூர் பிரதேச செயலகத்தின் கீழ் ஐந்திற்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்கவில்லை என்றும், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்ற தேர்தல்களில் வாக்குறுதிகளை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இது தொடர்பாக அக்கறை காட்டவில்லை என்றும் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தெரிவித்துள்ளார்கள். (2-6)

# போர்விமானங்களின் துணையுடன் தரையிறங்கிய கனேடிய பயணிகள்

(கொழும்பு)

வெடிகுண்டு அச்சுறுத்தலொன்றையடுத்து "கதேபசுபிக்" விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்று கனேடிய போர் விமானங்களின் வழித்துணையுடன் வன்கூவர் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

ஹொங்கொங்கிலிருந்து புறப்பட்ட விமானமே இவ்வாறு பாதுகாப்பாக தரையிறக் கப்பட்டது. எனினும் மேற்படி விமானத்தில் வெடிகுண்டுகள் எதுவும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசி மூலமே இந்த வெடிகுண்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இரு கனடிய "சி.எப்.-18" ஜெட் விமானங்களின் வழிகாட்டலுடன் இந்த "சி எக்ஸ்-839" பயணிகள் விமானம் தரையிறக்கப்பட்டது.

மேற்படி வெடிகுண்டு அச்சுறுத்தல் குறித்து விமானத்திலிருந்த பயணிகள் பலர் விமானம் தரையிறங்கும் வரை அறியாதிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (4)

# கலைஞர் கருணாநிதி...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கோடிக்கணக்கான சொத்துக்கள் இருக்கின்றன. வருமானத்துக்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. கட்சி வைத்திருப்பது வர்த்தகத்துக்கு உதவுகிறது. எனவேதான் அந்த இடத்தைக் கைப்பற்றத் துடிக்கிறார்கள். இதை கலைஞர் எப்படி எதிர்பார்க்காமல் இருந்திருக்கமுடியும்?"

*கேள்வி: "இருவரைப் பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?"*

*பதில்:* "நிர்வாகத்துக்கு ஏற்றவர் அழகிரியா" ஸ்டாலினா என்று நான் இப்போது கருத்துச் சொல்லமுடியாது. யாருக்கு கட்சித்தொண்டர் ஆதரவு இருக்கிறது என்று பார்த்து, அவர்கள் தலைவராக வந்த பிறகு தான் அபிப்பிராயம் தரமுடியும்.

ஆனால், ஸ்டாலின், அரசியலில் திணிக்கப்பட்டவர் அல்ல. 40 ஆண்டுகளுக்கு முன்னால் அரசியலில் நுழைந்து, படிப்படியாக உயர்ந்து, இளைஞர் அணிப் பொறுப்பாளராக ஆகி" அதன் பிறகு எம்.எல்.ஏ.வாகப் பணியாற்றி, சென்னை மேயராகவும் பொறுப்பு வகித்து, அமைச்சராகவும் அதைத் தொடர்ந்து துணை முதல்வராகவும் இன்று இருக்கிறார். தயாநிதி மாறனைப் போலத் திடீரென்று எம்.பி.ஆகி உடனே கேபினெட் அமைச்சராக ஆனவர் அல்ல ஸ்டாலின். இது அவரது அட்வான்டேஜ் என்பது எனது கருத்து. இந்தப் பதவி உயர்வுகளை எப்படிப் பயன்படுத்திக் காட்டுகிறார் எனக் காலப்போக்கில் தான் முடிவுக்கு வரமுடியும் !"

*கேள்வி: "மத்திய அமைச்சராக அழகிரியின் செயல்பாடுகள்?"*

*பதில்:* "அவர்தான் செயல்படவே மறுக்கிறாரே. செயல்பட மாட்டேன் என்று ஸ்டிரைக் பண்ணுகிறாரே. செயல்படாதவரின் செயல்பாட்டை நான் சொல்லமுடியும்?"

*கேள்வி: " கனிமொழியின் அரசியல் எதிர்காலம்?"*

*பதில்:* "அதைத் தீர்மானிக்க நான் கலைஞர் அல்ல. கனிமொழியின் திறமை, அனுபவத்தைப் பொறுத்தும் அல்ல அவருடைய அரசியல் எதிர்காலம். கலைஞரின் மனதைப் பொறுத்துத்தான் கனிமொழியின் எதிர்காலம் இருக்கிறது?"

*கேள்வி:" மத்தியில் காங்கிரசுக்கும் மாற்று இல்லைபோல் தெரிகிறதே?"*

*பதில்:* " காங்கிரசுக்கு மாற்று என்று யோசித்தால், அகில இந்திய அளவில் பாரதிய ஜனதாதான். காங்கிரசுக்கு எதிரான வாக்குகள் பல மாநிலங்களில் இவர்களுக்குத்தான் போய்ச்சேரும். பொதுவாகவே, இன்று மக்கள் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். எதற்கும் ஷாக் ஆவதில்லை. ஊழலா...பரவாயில்லை. விலைவாசி உயர்கிறதா...அதனால் என்ன ? என்று எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளும் போக்கு வந்துவிட்டதால், எதுவும் இங்கு பிரசாரமாக வடிவெடுக்க முடியவில்லை"

*கேள்வி: "டெலிபோனை ஒட்டுக் கேட்பது சில மாதங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டில் வெடித்தது. இன்று டெல்லியையும் கலக்கி வருகிறதே?"*

*பதில்:* "இந்திராகாந்தி பிரதமராக இருந்த காலம் தொட்டு நடக்கும் விடயம் இது. புதிதாக நடக்கவில்லை. இதுபற்றிய சர்ச்சை அவ்வப்போது வரும். வந்த வேகத்தில் அமுங்கிவிடும். என்னைப் பொறுத்தவரை, டெலிபோனை ஒட்டுக்கேட்கும் உரிமை, தீவிரவாதம் அதிகரித்துவரும் நாட்டில் அவசியமானது தான். அதைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதும் உண்மைதான். அரசாங்கம் எதைத் தான் தவறாகப் பயன்படுத்தவில்லை? பொலிஸைத் தவறாகத்தான் பயன்படுத்துகிறார்கள். அதற்காக, பொலிஸே வேண்டாம் என்று சொல்லப் போகிறோமா?"

*கேள்வி: "இத்தனை ஆண்டு காலப் பத்திரிகை உலக அனுபவத்தில் உங்களது சாதனையாக எதைச் சொல்வீர்கள்?"*

*பதில்:* " இன்னும் நாட்டில் தப்புகள் தொடர்ந்து நடக்கின்றனவே என்கிறீர்களா? நானும் என்னைப் போன்ற சில பத்திரிகைகளும் எழுதாமல் இருந்தால், இன்று இருப்பதை விட இன்னும்மோசமாக நாடுஇருந்திருக்கும் என்று சொல்வேன். தவறுகள் குறைச்சலாக நடக்க நாங்கள் காரணமாக இருக்கிறோம். இதுபோதாதா?" -வழக்கமான கர்ஜனையுடன் முடிக்கிறார் சோ!


*நன்றி : ஆனந்த விகடன்*



வடமாகாண கல்வி அமைச்சினால் யாழ். கல்வி வலயத்தில் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வில் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-என்.குமார்)

# இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு தொடர்பில் தொடர்ந்தும் முன்னுரிமை

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு புனர் வாழ்வளிப்பதில் தொடர்ந்தும் முன்னுரிமை வழங்கப்பட்டுள் ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜி.15 உச்சிமாநாட்டுக்கு முன்னோடியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எச்.எம். கிருஷ்ணாவுடன் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த தமிழ்மக்களை துரிதமாக மீளக் குடியமர்த்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என அமைச்சர் இதன் போது வலியுறுத்தினார்.

எனினும் மீள்குடியேற்ற நடவடிக்கைளை பூர்த்தி செய்வதற்கான உரிய காலநிலையை குறிப்பிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார். சுமார் 3 இலட்சம் வரையான இடம்பெயர்ந்தவர்களில் 50 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே தற்போது மீள்குடியமர்த்தப்பட விருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)

# உலகிலேயே முதல் தடவையாக ரோபோ நடத்திவைத்த திருமணம்!


ரோபோ என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற இயந்திர மனிதனால் உலகில் முதல் தடவையாக ஒரு திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் டோக்கியோ நகரில் இந்த விநோத திருமணத்தை மந்திரங்கள் சொல்லி நடத்திவைத்தது. மினுக்கும் கண்களும் பிளா டிக் குதிரைவால் கொண்டையும் போட்டிருந்த ஐஃபேரி என்ற இயந்திர யுவதி.

ஜப்பானில் அதிவேகமாக வளர்ந்து வரும் ரோபோ உற்பத்தித் தொழில்துறை மூலம் இந்த ஜோடி ஒருவரோடு ஒருவர் பழக நேர்ந்திருந்தது.

இவர்களுக்கு திருமணம் செய்த ஐஃபேரி ரோபோவை உருவாக்கியது மணப்பெண் சடோகோ ஷிபாடா வேலை பார்க்கின்ற நிறுவனம் ஆகும் .

மனிதர்களுடைய அன்றாட வாழ்வின் பல விடயங்களில் ரோபோக்களுக்கு இடமி ருக்க வேண்டும் என்று எப்போதுமே நம்பி வந்துள்ளவள் நான். இந்த அழகான இயந்திர



யுவதி என் வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்வுக்கு ஒரு சாட்சியாக இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன் என்றார் மணப் பெண்.

புதிய கணவர் டொமோஹிரோ ஷிபாடா ஒரு பல்கலைக்கழகத்தில் ரோபோடிக்ஸ் எனப்படும் இயந்திர மனிதன் பாடத்துறையில் பாடம் நடத்துகிறார்.

முதலிலே இருவரும் பழக ஆரம்பித்ததற்கு இந்த ரோபோக்கள் தான் காரணம். எனவே ரோபோவை வைத்து திருமணம் செய்து கொள்ள நாங்கள் முடிவெடுத்தோம் என்கிறார் இந்த மாப்பிள்ளை. (2-6)

# தமிழ் பேசும் மக்களின் அரசியல் விலாசம் தொலைந்து விடப்போகின்றது;

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுக்கப் போகும் அரசியலமைப்பு மற்றும் தேர்தல் முறைமை மாற்றங்களால் தமிழ்ப் பேசும் சிறுபான்மை இன மக்களின் அரசியல் விலாசம் தொலைந்து விடப்போகிறது.எனவே அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறைகூவல் விடுத்துள்ளது.

அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான கோரிக்கையை விடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் அரசியல் கட்சிகளில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம் எம்மை பலவீனப் படுத்தி பெரும்பான்மையை பலப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறது.

இதனை அரசாங்கத்திற்குள் பதவிகளை வகிக்கும் தமிழ் ,முஸ்லிம் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். இதை வெளியிலுள்ள நாம் புரிந்துகொண்டுள்ளோம். உள்ளே இருப்பவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள்.

இந்நிலையில் தொடர்ந்து அவர்கள் இருப்பார்களானால் அரசியலில் விலாசமே இல்லாமல் போய்விடுவார்கள். அரசியலமைப்பு மாற்றம் மற்றும் தேர்தல் முறைமையில் திருத்தங்கள் மூலம் சிறுபான்மை இன தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை பறிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.

வடக்கு- கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு திட்டமிட்டு சிறுபான்மை இன மக்களை அடக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே தமிழ், முஸ்லிம் என்ற ரீதியில் இனியும் நாம் பிரிந்திருக்காது தமிழ் பேசும் மக்களாக ஓரணியில் இணைய வேண்டும். இது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

அதேபோன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட மலையக கட்சிகளுடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட அரசியல் அங்கம் வகிக்கும் சிறுபான்மை கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம்.

இவ்வாறு நாங்கள் ஒன்று சேர்ந்து அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை, தனிநாடு கோருகிறார்கள், மீண்டும் புலிகளுக்கு உயிர் கொடுக்க முனைகின்றார்கள் என்று அரசாங்கம் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரத்தை முன்னெடுக்கும். அந்தப் பிரசாரத்திற்கு, சிறப்புரிமைகளுக்காக அரசுடன் இணைந்துள்ள எம்மவர்களும் ஒத்து ஊதுவார்கள். அவ்வாறானவர்களும் இறுதியில் விலாசம் இல்லாமல் போய் விடுவார்கள்.

நாம் தனி நாடு கோரவில்லை. எமக்குள்ள அரசியல் உரிமைகள் பறிக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்த்தே பேச்சுவார்த்தைகளை நடத்துகிறோம். தமிழ பேசும் மக்களாக ஓரணியில் திரள்கிறோம். சொந்த அபிலாஷைகளை தூக்கியெறிவோம்.

இன்று எமது முஸ்லிம் காங்கிரஸுக்குள்ளும் தனிப்பட்டவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தி தம் பக்கம் இணைக்க முயல்கிறது.

ஆனால் எம்மவர்க்ள சோரம் போகமாட்டார்கள். சிறுபான்மைக் கட்சிகளைப் பலவீனப்படுத்தி நாட்டில் பெரும்பான்மை இனத்தை பலப்படுத்துவதே அரசாங்கத்தின் திட்டமாகும் என்றார். (2-6)

# கொமிசியக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறைக்கல்வி நடுநிலைய ஒன்றுகூடுதல் மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொமிசியக் கூட்டம் (மரியாயின் சேனை) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-72)

# மழையால் யுத்த வெற்றி விழா ஒத்திகைகள் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் யுத்த வெற்றியின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள விழாவிற்கான ஒத்திகைகள் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த விழா கொழும்பு காலி முகத்திடலில் எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிலையில் இதற்கான ஒத்திகைகள் இடம்பெற்று வருகின்றன.

எனினும் கடந்த 3 நாட்களாக கொழும்பில் பெய்து வரும் கடும் மழை இந்த ஒத்திகைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை இலங்கையில் தென்மேற்குப் பருவக்காற்று மழைவீழ்ச்சி ஆரம்பித்துள்ள நிலையில் நாட்டின் பல்வேறு பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன. (6)

உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லப் பான்மை கெட்டு நாமமது தமிழரென கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்! ~ பாரதியார்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாரும் எதுவும் சொல்லலாம் தமிழர் கதி அந்தோ கதிதான்

யாரொடு நோவோம்; யார்க்கெடுத்துரைப் போம்... திருவாசகத்தின் இவ்வரிகள் தமிழினத் துக்கு மிகவும் பொருத்துடையவை.

இழப்புகளை மட்டுமே சந்தித்த எமக்கு ஆறு தல் கூறவும் தேறுதல் தரவும் யாருமில்லை.

நாங்களே அழுது, நாங்களே புலம்பி, நாங் களே துன்பப்படும் பரிதாபம் மட்டுமே எஞ்சியுள் ளது.

தமிழினத்தின் தலைமை என்று கூறிக் கொள்ளும் எவரிடமும் விசுவாசம், நேர்மை, உண்மைத் தன்மை எதுவுமே கிடையாது.

அவர்களின் உள்நோக்கம் மிகவும் பயங் கரமானது. அந்த உண்மையும் அவர்களுக்கு மட்டுமே தெரியும். உள்ளும் புறமும் வேறுபட்ட தோற்றங்கள்.

உள்தோற்றம் சுயலாபத்தின் சொரூபம். புறத் தோற்றமோ அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற் றும் அற்புதமான சாந்த சொரூபம்.

அடே அப்பா! இவர்களன்றோ எங்கள் தமிழ்த் தலைமைகள் என்று நம்பிக் கெடுவதுதான் தமி ழர் விதி.

எதுவாயினும் வகுத்தான் வகுத்தபடி நடந் தேறட்டும்.

ஆனால் ஒன்றை மட்டும் எங்கள் அத்தனை நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடமும் கூறிக்கொள் கின்றோம்.

நீங்கள் அறிக்கைகளை வெளியிட்டு அரசி யல் நடத்தவேண்டாம்.

ஆட்லறி ஷெல் அடித்து, ஆயுதப் போர் புரிந்த பின்பு உங்கள் அறிக்கைகள் அரச நிர்வாகத் தின் குப்பைத் தொட்டிகளை நிரப்புமேயன்றி, எந்த விமோசனத்தையும் எங்களுக்குத் தரப் போவதில்லை.

தேவையாயின் நாடாளுமன்றத்தில் துணிந்து பேசுங்கள். ஜனாதிபதியை அடிக்கடி சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறுங்கள்.

குடியேற்றம் நடக்கும் இடங்களுக்கு நேரில் சென்று பாருங்கள். தமிழர் பகுதிகளில் நடக் கும் ஊர்ப்பெயர் மாற்றத்தை படம்பிடித்து நாடாளு மன்றத்தில் மாட்டுங்கள்.

குய்யோ முறையோ என்று கத்துங்கள். முடிந் தால் அந்தந்தப் படைத் தளபதிகளையும் சந்தித்து அப்பு ராசா இப்படியெல்லாம் செய்யாதே மகனே! என்று சொல்லுங்கள்.

முந்தி இப்படிச் செய்ததால்தான் இந்த நாடு அழிந்தது என்ற உண்மையை எடுத்துரையுங் கள்.

இவற்றை விட்டுவிட்டு உங்களுக்குள் நீங்க ளும் எங்களுக்குள் நாங்களும் முட்டிமோதி விமர்சிப்பதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது.

இவ் உண்மையை உணர்ந்து கொண்டா லன்றி விமோசனம் தமிழினத்திற்கில்லை.

# வன்னி யுத்தம் தொடர்பாக அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க கால அவகாசம் நீடிப்பு -அரச இணையம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது இலங்கை அரசாங் கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படும் செயற் பாடுகள் சம்பந்தமாக அமெரிக்கா சுமத்தியுள்ள குற்றச்சாட்டு அறிக்கைக்கு பதிலளிக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு பதிலளிக்க வழங்கப்பட்ட கால அவகாசம் யூலை மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது என அரச இணை யத்தளம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் போர் சூனிய வலயத்தில் இருந்த மக்களுக்கு போதுமான உணவு மற்றும் மருத்துவ உதவிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை என்பதே அமெரிக்காவின் பிரதான குற்றச்சாட்டாக வைக்கப்பட்டிருந் தது.

இந் நிலையில் இக்குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க நிய மிக்கப்பட்ட குழு, அமெரிக்காவின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ள நபர்கள், அவர்களின் பின்னணி, குற்றச் சாட்டு களின் தன்மை, அவ்வாறான சம்பவங்கள் ஏற்படக்காரண மாக அமைந்த விடயங்கள், இலங்கையில் நடை முறை யில் உள்ள சட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளக் கூடிய நட வடிக்கைகள் குறித்து ஆராயும் என தெரிவிக்கப்பட்டுள் ளது. (2-6)

# அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச்செல்லும் தனியார் பேருந்துகள்

(வேலணை)

தீவகத்திலிருந்து யாழ் நகரை நோக்கி பயணிக்கும் தனி யார் பேருந்துகள் அளவுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றி செல்வதால் அப்பேருந்துக்களில் பயணிப்போர் நெரிசலில் பயணிப்பதால் பலத்த அசௌகரியத்தை எதிர் நோக்குகின்ற னர்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினரின் சட்ட திட்டங் களை பெரும்பாலான பேருந்து நடத்துனர்கள் பின்பற்றுவது இல்லை என்றும் மக்களின் நிலைமைகளை தமது கருத்தி லெடுப்பது இல்லை என்றும் மக்கள் கவ்லையடைகின்றனர்.

இனியாவது தனியார் பேருந்துகளில் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றி வரும் நடத்துனர்கள் மற்றும் ஓட்டுனர் கள் மீது பொலிஸார் மூலமாகவோ அன்றி தமது குழுவின் பரிசோதகர் மூலமாகவோ சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பேருந்துகளின் தொகையை அதிகரிப்பதன் மூலம் (வழித் தடங்கல் அனுமதியை வழங்குவதன் மூலம்) பயணிகளின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணலாமென மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். (2-22)

# வெளிவாரிப் பட்டதாரிகள் சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான விடயங்கள் பற்றிய கலந்து ரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டவர்களும், இது வரை பதிவினை மேற்கொள்ளாதவர்களும் தவறாது கலந்து கொண்டு தங்களது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தமது சங்கத்தில் பதிவினை மேற்கொண்ட 2004ஆம், 2005ஆம் மற்றும் 2006ஆம் ஆண்டு வெளிவாரிப் பட்ட தாரிகளையும் அவசியம் கலந்து கொள்ளு மாறு யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரிகள் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வர்த்தகர்களுக்கான நஷ்ட ஈட்டு விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட வர்த்த கர்களுக்கான நஷ்ட ஈட்டு விண்ணப்பப்படிவத்துடன் பொலிஸ் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்து வழங்கும் இறுதிநாள் ஜூன் முதலாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று மேற்படி மாவட்டங்களுக்கான வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றிய தகவல் முகாமை யாளர் கே. கோகுலன் அறிவித் துள்ளார்.

அத்துடன் விண்ணப்பப் படிவத்தில் இலங் கை வங்கியின் கிளிநொச்சி கிளை கணக் கிலக் கத்தை இணைக்கும் படியும் விண்ணப்பப்பத் திரத்தை சமர்ப்பிப்பவர்கள் 0213208094 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரி லோ சமர்ப்பிக்கும் படி மேலும் தெரிவித்துள்ளார். (4-29)

# கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான மீள்குடியேற்றம் தொடர்பான அறிவித்தல்

## கிளி. அரச அதிபர் விடுத்துள்ளார்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தற்காலிகமாக வெளி மாவட்டத்தில் உறவினர், நண்பர்கள் வீட்டில் வசிக்கும் கரைச் சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் இன்றும் நாளை புதன்கிழமையும் மீள்குடியமர்த்தப்படவுள்ளதால் இதற் கமைய பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வர்கள் தமது தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங் களில் நீக்கம் செய்து இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலத்திற்கும் நாளை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் வருகை தருமாறு கிளிநொச்சி அர சாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இதற்கமைய இன்று வன்னேரிக்குளமம், ஆனைவிழுந் தான், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம் ஆகியகிராம அலுவலர் பிரிவுகள் பதியப்படவுள்ளதால் அப் பகுதி மக்களை கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியால யத்திற் கும் நாளை புதன்கிழமை திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, உதய நகர் மேற்கு, உதயநகர் கிழக்கு, பெரியபரந்தன், விவேகானந்த நகர், கிருஸ்ணபுரம், அம்பான்குளம், செல்வா நகர் , ஆனந்தபுரம் , தொண்டமான்நகர், கிளிநகரம், கன கபுரம், கணேசபுரம், ஜெயந்தி நகர், உருத்திரபுரம், ஊற்றுப் புலம், புதுமுறிப்பு கிழக்கு ஆகிய பிரிவுகள் பதியப் படவுள் ளதால் அப்பகுதி மக்களை கிளி. மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.


மேலும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தற்காலிக பதிவு நீக் கத்துடன் வருபவர்கள் மட்டுமே மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக் கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார். (2-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## இலட்சியம் இல்லாமல் வாழாதே



உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால்,இலட்சியம் இல்லாமல் வாழ்பவன் 50 ஆயிரம் தவறுகள் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். மக்கள் உன்னைப் புகழ்ந்தாலும் சரி , இகழ்ந்தாலும் சரி, கடவுள் உனக்கு அருள் புரியட்டும் அல்லது புரியாமல் போகட்டும். உன் உடல் இன்றைக்கே வீழ்ந்துபோகட்டும். ஆனால் நீ , உண்மை என்னும் பாதையில் இருந்து மட்டும் அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனமாக இரு. மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ,அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனை களை கடந்தாகவேண்டும்.





நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழாவில் விநாயகர் தேரில் எழுந்தருளுவதையும் தேர்ப் பவனியின் முன்னால் சிறுவர்கள் காவடி ஆடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

# அஞ்சலிக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இல.43, 3ஆம் குறுக்குவீதியில் அமைந்துள்ள தமிழ் தேசியத்துக்கான மக்கள் முன்னணி தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் முன்னணியின் முக்கிய பிரமுகர்களின் அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளதாக நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார். (4)

# புடைவைக் கைத்தொழில் பயிற்சி நெறிக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளல்

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

புடைவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளுக்கு 2010, 2011 கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு புடைவைக் கைத்தொழில் அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி விண்ணப்பங்கள் இம் மாதம் 31 ஆம்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக புடைவைக் கைத்தொழில் பணிப்பாளர் புடைவைக் கைத்தொழில் அமைச்சு இல.70, டீ.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை கொழும்பு-10 என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கை இயந்திர புடைவைக் கைத்தொழில் ஆரம்பப் பயிற்சி ஒருவருடமும் கை இயந்திர புடைவைக் கைத்தொழில் பயிற்சி 2 வருடங்களும் நடைபெறும். ஒரு வருட பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும் 8 ஆம் ஆண்டு வரை கல்வி பயின்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

2 வருட பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் 18 வயதுக்கும் 28 வயதுக்கும் உட்பட்டவராகவும் விவாகம் ஆகாதவராகவும் க.பொ.த.சாதாரண தரத்தில் சிங்களம், தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் 2 தடவைகக்கு மேற்படாமல் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (2-6)

# கடும்மழை, வெள்ளம் காரணமாக 31 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)

மழை வெள்ளம் காரணமாக 31 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரண முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களில் நிலவி வரும் மோசமான காலநிலை காரணமாக இதுவரையில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

மழை காரணமாக கம்பஹா மாவட்டத்தில் 4ஆயிரத்து160 குடும்பங்களும் கொழும்பு மாவட்டத்தில் 4000 குடும்பங்களும் களுத்துறை மாவட்டத்தில் 108 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் வேறும் தற்காலிக இருப்பிடங்களில் தங்கியிருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை மழை வெள்ளம் காரண மாக நீரின் மூலம் பரவக்கூடிய தொற்று நோய்கள் ஏற்படலாம் என சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடுமையான மழை காரணமாக நீரின் ஊடாக உருவாகக்கூடிய டெங்கு, வயிற்றோட்டம் மற்றும் வாந்தி பேதி உள்ளிட்ட பல தொற்றுகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடைகளில் உணவு மற்றும் நீரைப் பருகுவதனை தவிர்க்குமாறு சுகாதார அ[illegible]சின் உயரதிகாரி டாக்டர் ரிசின்தா பிரேமர[illegible] தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நடைபாதை வியாபாரிகளினால் விற்பனை செய்யும் உணவுப் பொருட்களை தவிர்க்குமாறும் கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறும் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# மக்கள் நலனை பூர்த்தி செய்யாது யுத்த வெற்றி அவசியமானதா?

## இடது சாரி முன்னணி கேள்வி

(கொழும்பு)

மக்களின் நலன்களை பூர்த்தி செய் யாது யுத்த வெற்றி அவசியமா என இடது சாரி முன்னணி கேள்வியெழுப்பியுள்ளது.

இலங்கை பூராகவும் யுத்த வெற்றியைக் கொண்டாட அரசினால் கோடிக்கணக்கான பணம் செலவிடப்படவுள்ளது. ஆனால் நாட்டின் பல பாகங்களிலும் தமிழ் மக்கள் பல துன்பங்களை எதிர்கொள்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்துள்ள போதும் பல தமிழ் மக்கள் அகதிகளாக எவ்வித உதவிகளும் இன்றி பல துன்பங்களை எதிர் கொள்கின்றனர்.

ஆனால் அரசு யுத்த வெற்றியை கொண்டாடுவதையே தமது நோக்கமாக கொண்டுள்ளது.. எனவே இவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தில் யுத்த வெற்றி கொண்டாடப்படுமாயின் அது தமிழ் மக்களின் மனதை பாதிப்பதாக அமையும் என அக்கட்சியின் செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவித்தார். (2-6)

# தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு அவசியம்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்பேசும் மக்களுக்கு ஓர் நிரந்தரத் தீர்வு அவசியம். அதற்கான ஆக்கபூர்வமான திட்டத்தினை ஐக்கியதேசிய கட்சி வரவேற்கின்றது. அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத்திட்டத்திற்கு நாம் ஆதரவு அளிப்போம் என ஐக்கிய தேசிய கட்சி மேலும் கூறியுள்ளது.

அரசாங்கம் அரசியலமைப்பு மாற்றம் மற்றும் செனட் சபை உள்ளிட்ட விடயங்கள் குறித்து தகவல்களை வெளியிட்டு வருகின்றது. நாட்டுக்குப் பொருத்தமான அரசியலமைப்பு திருத்தங்களை நாங்கள் எதிர்க்கமாட்டோம் என்று ஏற்கனவே கூறியுள்ளோம்.

அதேவேளை , முக்கியமாக அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தீர்வுத்திட்டத்தை முதலில் கொண்டு வராமல் செனட் சபையை அமைப்பது அர்த்தற்ற விடயம் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

அரசியல் தீர்வுத் திட்டத்துடன் செனட்சபை அமைக்கப்படுமாயின் அதனை ஏற்றுக் கொள்ளலாம். செனட்சபை என்பது சிறந்த விடயம் என்பதனை நாங்கள் ஏற்கின்றோம். ஆனால் அது தீர்வுத்திட்டத்துடன் வர வேண்டிய விடயமாகும்.

சகல இன மக்களும்ஏற்றுக்கொள்ளும் தீர்வுத்திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் [illegible]லுமாயின் அதற்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம். தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தர தீர்வு ஒன்று அவசியமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி மேலும் கூறியுள்ளது. (2-6)

# குப்பைகள் அகற்றப்படாததால் வீதியில் பயணிப்போர் அசௌகரியம்

(வேலணை)

யாழ். பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து ஸ்ரான்லி வீதிக்கு செல்லும் ஒழுங்கையின் கிழக்குப்பக்கமாக கடைத்தொகுதியின் அருகில் குப்பைகள் மற்றும் வியாபார நிறுவனங்களின் கழிவுகளீள தினமும் கொட்டுவதால் துர்நாற்றம் வீசுகின்றது.

இப்பகுதியில் கொட்டப்படும் குப்பை கழிவுகள் பல நாட்களாக அகற்றப்படாமல் காணப்படுவதாலும் கழிவு வாய்க்கால்களில் எழும் துர்நாற்றத்தாலும் இவ்வீதியால் பயணிக்கும் அனைவரும் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

மேலும் இவ்வீதியில் ஐந்துக்கும் மேற்பட்ட தனியார் வங்கிகள் உள்ளன என்பதால் பொதுமக்களின் போக்குவரத்து இப்பகுதியில் அதிகமாக காணப்படுகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டோரை நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (6-22)

# பெந்தக்கோஸ் பெருவிழா

யாழ். ஆயர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் பெந்தக்கோஸ் பெருவிழா இவ்வாண்டு மறைமாவட்ட ரீதியில் கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான ஆயத்தவழிபாடுகள் நாளை புதன்கிழமை, நாளை மறுதினம் வியாழக் கிழமை, 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் பிற்பகல் 4.30 முதல் 6 மணி வரை யாழ் இறைத்தியான இல்லத்திலும் இறுதி திருவிழிப்பு திருப்பலி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். புனித மடுத்தீனர் குரு மடத்திலும் நடை பெறவுள்ளதாகவும் யாழ். ஆயரின் செயலர் அறிவித்துள்ளார். (6)



வரணி இடைக்குறிச்சி சர்வோதய முன்பள்ளியின் விளையாட்டு விழாவின் போது முன்பள்ளித் தலைவர் சி.துரைராசா, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்பள்ளி ஆசிரியை மதிவதனி செல்வராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம். இடைவேளை உடற்பயிற்சி கண்காட்சியில் முன்பள்ளி மாணவர் ஈடுபடுவதை அடுத்துள்ள படத்திலும் கலந்து கொண்டோருள் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.



தமக்கான மாதாந்தக் கொடுப்பனவை வழங்கக்கோரி யாழ். தாதிய பயிற்சிக்கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதையும், மாணவர் பிரதிநிதிகள் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# தமிழ் மக்களின் போராட்டத்துக்கான நியாயங்கள் வலுவாகவே உள்ளன!

## தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி அறிக்கை

**வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின் அவலங்களின் ஓராண்டு நிறைவையொட்டி தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கை இங்கு பிரசுரமாகிறது.**

தமிழர் விடுதலைப் போரின் ஆதார பூமியாக இறுதிவரை விளங்கிய வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்த ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் வாழ்வும் வளமும் திட்டமிட்டு துடைத்து அழிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் சிறைப்பிடிக்கப்பட்ட மக்கள் முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டனர். மனிதநேய சட்டங்களுக்கு முரணாக இவர்களில் பல நூற்றுக்கணக்கானவர்கள் போதிய மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டதால் செத்து மடிந்தனர்.

பல நூறுபேர் மனநிலை பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். விசாரணை என்ற பெயரில் பல்லாயிரம் பேர் கொடூர சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். போர் முடிந்து ஒருவருடம் நிறைவு பெறும் நிலையிலும் கூட 73 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வவுனியா நலன்புரி நிலையம் என்னும் பெயரில் இயங்கும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அகதி முகாம் அவலங்கள் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

ஒடுக்கு முறைக்கு எதிராக ஈழத்தமிழ் மக்கள் நடத்திய எதிர்ப்பியக்கம் சிங்கள தேசியவாத அரசினால் அழிக்கப்பட்ட-பெரும் துயரம்தோய்ந்த-வரலாற்றின் குறியீடாக மே-18 அமைகின்றது.

அறுபது வருடங்க ளுக்கு மேலாக நீண்ட தமிழ்-சிங்கள தேசிய இனச்சிக்கல் தணிக்கப்படாது வெறுமையான இராணுவ ஒடுக்குமுறையை மையப்படுத்தி இலங்கை அரசு நடத்திய இன ஒழிப்பு முகம் கொண்ட போரும், அதற்கு சர்வதேசரீதியாக வழங்கப்பட்ட ஆதரவும் இந்த மே-18 இன் மற்றைய துன்பியல் முகமாக அமை கின்றது.

சர்வதேச போர்ச் சட்டங்களினால் தடை செய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகள், வெள்ளைப் பொஸ்பரஸ் குண்டுகள், எரி குண்டுகள், கனரக ஆயுதங்கள், பல நூறு கிலோ நிறை கொண்ட விமானக் குண்டுகள் வீசப்பட்டு தமிழர் தாயகமெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்ட தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கையின் பெரும் சாட்சியமாக முள்ளிவாய்க்கால் எனும் எங்கள் கிராமம் விளங்குகின்றது.

மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டவர்களில் பல்லாயிரக் கணக்கானோருக்கு போதிய அடிப்படை வசதிகள் வழங்கப்படாது துன்புறுகின்றனர். பொதுமக்கள் வாழ்விடங்களில் பல்லாயிரக்கணக்கான படையினர் பாதுகாப்பு என்ற பெயரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் பொது மக்களின் இயல்பு வாழ்வுக்கு பெரும் இடையூறாக அமைந்துள்ளது.

உடையார்கட்டில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை தமிழ் மக்களால் விடப்பட்டுச் சென்ற அவர்களது அசையும் அசையாச் சொத்துக்களில் பெரும்பகுதி தென்பகுதிகளுக்கு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் நம்புகின்றனர்.

போரின் போதும், போரிற்கு பிற்பாடும் போர்க்கைதிகளாகவும், அரசியல் கைதிகளாகவும் கைது செய்யப்பட்ட பல்லாயிரம் தமிழ் இளையவர்களின் விபரங்கள் அச்சம் தரும் வகையில் மறைக்கப்படுகின்றது.

கடந்த ஓராண்டு காலமாக குடாநாட்டிலும் ஏனைய இடங்களிலும் இடம் பெற்றுவரும் ஆட்கடத்தல் சம்பவங்களும் கப்பம் கோரும் சம்பவங்களும் தமிழர் தாயகத்தினை தினசரி அச்சுறுத்தி வருகின்றது.

இன்று பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. தமது கையில் இருக்கும் அரச அதிகாரத்தை பாவித்து எதேச்சாதிகாரமாக தமிழர்களின் தாயக பூமியில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. தமிழர் கிராமங்களுக்கு சிங்களத்தில் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

போருக்குப் பிந்திய அபிவிருத்தி என்கின்ற வெற்றுக்கோசத்துடன் சர்வதேசரீதியாக பெரும் நிதி ஆதாரங்களை இலங்கை அரசு திரட்டுகின்றது. ஆனால் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அரச நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகள் அரச இயந்திரம் இடும் உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளனர்.

மே 18இற்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கை அரசானது தமிழர் தேசத்திற்கு எதிராக மேற்கொண்டுவரும் அரசியல், இராணுவ, பொருளாதார ஒடுக்குமுறைகளையே இன்றைய அவல நிலைவரம் சுட்டிக்காட்டுகின்றது.

மே-18இல் இலங்கை பெற்ற போர்வெற்றி தமிழர்களின் உரிமைப்போராட்டம் கொண்டிருந்த தார்மீக, அரசியல் நியாயங்களை தோற்கடிக்கவில்லை. அவை மேலும் பலப்படும் போக்கே இன்று நிலவுகின்றது. ஆயுதப் போர் அழிக்கப்பட்டாலும் அந்தப் போரின்மையமான உரிமைக்கான அரசியல் தொடர்ந்தும் இயங்குவதை தாயகத்திலும், புலத்திலும் எங்களால் அவதானிக்க முடிகின்றது.

தமிழர்களின் தேசம் எனும் நிலைப்பாடு அங் கீகரிக்கப்படுவதே இனச்சிக்கல் தணிப்புக்கான முதன்மையானமுன்னெடுப்பாக அமைய முடியும். சர்வதேச சமூகம் இந்தப் பின்னணியில் இலங்கைத்தீவின்நிலைவரங்களை அவதானிக்க வேண்டும் என தமிழ்தேசியத்திற்கான மக்கள் முன்னணி கோருகின்றது.

மே-18 ஓராண்டு நினைவு நிகழ்வுகளில் அனைத்து தமிழ் பேசும் மக்களுடனும் கைகோர்க்கும் தமிழ்த்தேசியத்திற்கான மக்கள் முன்னணி,

தமிழ் மக்களிற்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாகவும், போர்க் குற்றம் தொடர்பாகவும் பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணைகள், நடத்தப்பட்டு தமிழர்களுக்கு நீதி வழங்கப்படல் வேண்டும்.

இலங்கையின் சிறைக்கூடங்களில் வாடும் அனைத்து தமிழ் அரசியல்-போர்க்கைதிகளும் விடுவிக்கப்படல் வேண்டும்.

தமிழர்கள் தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்பது அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் இனச்சிக்கலுக்கான தீர்வு அமைய வேண்டும் என்றும் கோருகின்றது என்றுள்ளது. (ச)

## ஈரானிய ஆன்மீகத் தலைவருடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்திப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈரானிய ஆன்மீகத்தலைவர் அயத்துல்லா அல் கொய்மனியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக்த் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானிய ஆன்மீகத் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. ஜனாதிபதியின் தலைமையில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்களுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்கப்படும் என ஆன்மீகத் தலைவர் உறுதியளித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வரும் நட்புறவுகளை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி ஈரானிய ஆன்மீகத் தலைவருக்கு விளக்கமளித்துள்ளார். (ச-5)

## தகவல் தொழில் நுட்பபட்டக் கற்கை நெறிக்கான புலமைப்பரிசில்

தகவல் தொழில் நுட்ப பட்டக் கற்கை நெறியான BIT கற்கை நெறிக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். யாழ் மாணவர்களுக்காக விரிவுரைகள் எம்.சி.எஸ் தகவல் தொழில் நுட்ப வளாகத்திலும் பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகம் நடாத்துகின்றது. மூன்று ஆண்டுகளைக் கொண்ட இத்தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியானது, மேலதிகமாக தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா பட்டத்தை முதல் ஆண்டின் முடிவிலும், உயர் டிப்ளோமா பட்டத்தை இரண்டாம் ஆண்டின் முடிவிலும் வழங்குகின்றது. BIT கற்கைநெறியில் சிறப்பான செயற்பாட்டிற்கான விருதினை பெற்றுக்கொண்ட MCS கணனி நிறுவனம் BIT மாணவர்களிற்கு, ICDL எனப்படும் International Computer Driving licenseக்கும், கணினிப்பொறியியலாளர் (USA), Sun Java கற்கை நெறிகளுக்கு 100 % புலமைப்பரிசிலையும் வழங்குகின்றது. மேலும் இவர்கள் பிரித்தானிய கணினிச்சங்கத்தின் அங்கத்துவத்தையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது.மேற்படி புலமைப்பரிசிலுக்கான விண்ணப்ப முடிவு திகதி 21மே 2010 ஆகும். தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வமுடைய பல்கலைக்கழக மாணவர்கள், அரச தனியார்துறை ஊழியர்கள், பாடசாலை விலகியோர் யாவரும் இக்கற்கைக்கு விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களை இல 324 பலாலி வீதி (பரமேஸ்வரா சந்தி) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதியாக பரமராஜா நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக சுப்பிரமணியம் பரமராஜா நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் தொடர்பான கடிதம் தொலை நகல் மூலம் யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றபதிவாளருக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவால்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.வி க்னராஜாவின் சேவைக்காலம் முடிபடைந்துள்ள நிலையிலேயே மட்டக்களப்பு குடியியல் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சுப்பிரமணியம் பரமராஜா யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## தீர்க்கமான முடிவு அறிவிக்...

வருடங்களுக்கு மேலாக எமது சொந்த மண்ணில் மீள்குடியமர்வதற்குத் தொடர்ந்தும் போராடி வருகின்றோம்.

எனினும் எமது போராட்டத்திற்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை. இப்போது வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் தேவையற்ற சூழ்நிலையில் எம்மைச் சொந்த மண்ணில் மீள்குடியேற்றுமாறு வலியுறுத்துகின்றோம்.

எனினும் எவரும் உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாகவில்லை. எனவே இனியும் யாழ்.மாவட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் தாமதிக்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது மக்களுக்குத் தீர்க்கமான முடிபொன்றை ஒரு மாத காலத்திற்குள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்க வேண்டும்.

அம்முடிபு ஒரு மாத காலத்திலோ அல்லது 5 வருடங்களிலோ மீள்குடியேற்றம் என்ற காலஅளவை உரியவர்களுடன் பேசி அறிவிக்க வேண்டும்.

இல்லையேல் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 9 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராகப் போராட்டம் நடத்துவோம். இனிமேல் நாங்கள் கூட்டம் நடத்தவோ எவரையும் சந்தித்துக் கோரிக்கை விடுக்கவோ முயற்சிக்க மாட்டோம் என வலி.வடக்கு மீள் குடியேற்றப் புனர்வாழ்வுக் குழுத் தலைவர் தெரிவித்தார். (ச-5)

## புனர்வாழ்...

கப்பட்டு, புனர்வாழ்வு வழங்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அனைவரும் இன்று பெற்றோர்களிடம் கையளிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு விடுவிக்கப்படும் 600 பேரில் பல்கலைக்கழக மாணவர்களும் உள்ளடங்குவர். இவ்வாறு விடுவிக்கப்படுபவர்கள் அனைவரையும் இன்று காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, உரியவர்களின் பெற்றோர்களிடம் கையளிப்பார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)



கூட்டமைப்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நினைவு நிகழ்வில் கூட்டமைப்பு எம்.பி. மாவை.சேனாதிராஜா உட்பட பிரமுகர்கள் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## போர்க் காலப் படிப்பினைகள்...

சண்முகம், ஹேவாமாதர ஹமகே சிறிபால பலககார,

திருமதி மனோகரி இராமநாதன், மார்க்ஸ்வெல் பராக்ரம பண்ணகம ஆகியோரும் இந்த ஆணைக்குழுவில் இடம்பெறுவர்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது குறித்தும் ஆணைக்குழு பரிந்துரைக்கும். இந்தக் காலங்களில் நடைபெற்று வந்த நிகழ்வுகளுக்கு எந்தவித தனிநபரோ அல்லது நிறுவனமோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமாக இருந்திருப்பார்களா? என்பது குறித்து இந்த ஆணைக் குழு விசாரிக்கும் என்று இது தொடர்பாக அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் நிகழாமல் தடுக்கவும் எதிர்காலத்தில் அனைத்துச் சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் மேலும் தேசிய ஒருமைப்பாட்டையும் உருவாக்கத் தேவையான விடயங்கள் குறித்தும் இந்தக் குழு தனது பரிந்துரைகளை வழங்கும்.

போர்க் கால கட்டங்களில் நடந்தவை குறித்து ஆராயவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் ஒரு உள்ளூர் மட்டத்திலான ஏற்பாட்டை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கான சந்திப்பொன்றில் இலங்கையில் நிரந்தரப் பிரதிநிதி கூறியதை ஜனாதிபதி அங்கீகரிப்பதாகவும் அமைச்சரவை கூறியுள்ளது. (ச-5)

## யாழ்ப்பாண...

மீதான அந்த விசாரணைகள் தொடர்வதால் அவரைப் பிணையில் செல்வதற்கு நேற்றைய வழக்கில் அனுமதிக்கப்படவில்லை. அவர் தொடர்ந்தும் யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ச-5)

## வன்னிப்...

அதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் இறுதிப் போர் அவலத்தின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றபோது அலுவலகத்தைச் சுற்றி இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்ததுடன் அவ் அலுவலகத்திற்குள் பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் செல்லக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வுக்கு மத குருமார்களைத் தவிர ஏனையவர்கள் உள்ளே செல்லப் படையினர் அனுமதி வழங்கவில்லை. ஊடகவியலாளர்களும் விசாரணைகளுக்குப்பின்னர்திருப்பிஅனுப்பப்பட்டனர். (எ-1)

## மதில்...

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது வழியில் உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-27)

## மனித உரிமை மீறல்கள் குறித்து...

போர் நடந்து முடிந்த ஓராண்டு நிறைவடையும் நிலையில் நேற்று அந்த அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கொல்லப்பட்டது மற்றும் அனுபவித்த துயரங்களின் அளவு ஆகியவைகளை வைத்துப் பார்க்கும் போது இதற்குத்தக்க ஒருபதில் தரப்பட வேண்டும் என்று இந்தக் குழுவின் தலைவரும் முன்னாள் ஐ.நா.மன்ற மனித உரிமை ஆணையாளருமான லூயிஸ் ஆர்பர் கூறியிருக்கின்றார்.

சர்வதேச நெருக்கடிகள் குழு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மோதலில் காயமடைந்த மக்கள் அரசு மற்றும் புலிகள் ஆகிய இரு தரப்பினருமே பல ஆண்டுகளாக நடந்த இந்த மோதலில் சர்வதேச மனித உரிமை நேயச் சட்டங்களை மீறியிருந்தாலும் போரில் இறுதி மாதங்களில் இந்த மீறல்கள் அடிக்கடி நடக்க ஆரம்பித்தன.

மேலும் மீறல்களின் தன்மை மிகவும் ஆபத்தானவையாக இருந்தது. அரச படையினர் மீண்டும் மீண்டும் வேண்டும் என்றே சர்வதேச சட்டத்தை மீறி சிவிலியன்களைத் தாக்குவது, மருத்துவமனைகளைத் தாக்குவது மற்றும் மனித நேய நடவடிக்கைகள் நடக்கும் இடங்களைத் தாக்குவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டன என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளது.

### பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல்

குறிப்பாக 'நோ பையர் சோன்' எனப்படும் தாக்குதல்கள் தவிர்க்கப்படும் பகுதி என்று அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகளின் மீதே, மீண்டும் மீண்டும் நடந்த தாக்குதல்கள் குறித்துச் சேகரித்துள்ள சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது இந்தக் குற்றங்கள் இலங்கைப் பாதுகாப்புப் படைகளில் இருக்கும் குறிப்பிட்ட சில நபர்களால் இழைக்கப்பட்டன என்று நம்புவதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன.

இந்தப் பகுதிகளில் கனரக குண்டுத் தாக்குதலை அரச படைகள் நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் தூண்டினர் என்று கருதுவதற்கு இடமில்லை.

விடுதலைப்புலிகள் இந்த இலக்குகளுக்கு மிக நெருக்கமாக இருந்தாலும், அந்த இலக்குகளுக்குள்ளேயே அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இருந்ததாலும் அவர்கள் இந்தக் கனரகக் குண்டுத் தாக்குதல்களைத் தூண்டியிருப்பார்கள் என்று கருத முடியவில்லை.

மேலும் இந்தப் பொதுமக்களை இந்தத் தாக்குதல்கள் அற்ற பகுதிகளுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டதே அரசுதான். அரசுக்கு அவர்கள் இருந்த இடங்கள் தெரியும். இந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் சிவிலியன்கள் என்று தெரியும்.

அவர்களுக்கு ஐ.நா. அலுவலர்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளிடம் இருந்து தகவல்களும் வந்து கொண்டிருந்தன. செயற்கைக் கோள்படங்கள் அரசிடம் இருந்தன. நேரில் பார்க்கக் கூடியதாகவும் இருந்திருக்கின்றது.

ஆனால் பல மாதங்களாகவே தொடர்ந்து சிவிலியன்கள் மீது ஷெல் அடித் தாக்குதல்களை நடத்துகின்றீர்கள் என்று பல முறை சொல்லப்பட்டும் படையினர் தொடர்ந்து அதே பாணியில் தாக்குதல்களை நடத்தி சிவிலியன்கள் தாக்கப்படவில்லை என்று கூறி வந்தனர்.

### புலிகள் மீது குற்றச்சாட்டு

விடுதலைப்புலிகளும் போர்ப் பகுதிகளிலிருந்து தப்பி வெளியேற முயன்ற பொதுமக்களைத் தடுத்து, அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் கொன்று அல்லது காயப்படுத்தியதன் மூலம் சர்வதேச சட்டங்களை மீறியிருக்கின்றார்கள்.

சர்வதேச சமூகத்தில் பெரும் பகுதி நாடுகள், இந்தப் போர் நடந்து கொண்டிருந்த போது நடைபெற்ற மீறல்களைக் கண்டும் காணாமலும் இருந்தன.

பல நாடுகள் போரின்போது, போர் குறித்த சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டது மற்றும் அதன் காரணமாக எழுந்த பெரும் மானுடத் துயரம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதை வரவேற்றன என்று அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்18.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.